Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்

---

# பாண்டிக் கோவை
# (ஆசிரியர் யார் என அறியப்படவில்லை)

# pANTik kOvai
# (in tamil script, Unicode/UTF8 format)

---

**Acknowledgements:**
Etext-Input-keying, Proof reading, Web versions in TSCII & Unicode as well as PDF: N D LogaSundaram & N D Rani - Chennai
Web Master : Dr. K.

Kalyanasundaram, Lausanne,
Switzerland

This webpage presents the Etext in Tamil script in TSCII 1.7 encoding. To
view the Tamil text correctly you need at least one TSCII-compliant Tamil
font installed on your computer and the browser set to display webpages with "user defined" charset.

© Project Madurai 1998 - 2009
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to
preparation of electronic texts of tamil literary works and to distribute

them free on the Internet. Details of Project Madurai are available at the website. You are welcome to freely distribute this file, provided this header page iskept intact

---

# பாண்டிக் கோவை

இறையனார் அகப்பொருள் உரையில்
காணப்படும் எடுத்துக்காட்டு,
மேற்கோள்
பாடல்கள் ஈங்கு தொகுக்கப்
பட்டுள்ளன (செம்பகுதியாம் 325+
பாடல்கள் // கோவை
400 கலித்துறைப் பாடல்களில் பாடுவது
மரபு) ஆசிரியர் யார் என
அறியப்படவில்லை
நூலின் பெயரும் ஆங்கு
காட்டப்படவில்லை. ஆனால் இந்நூல்

முன்பு தனியாக அச்சினில்
பதிப்பிக்கப்பட்டுள்ளதாகத்
தெரிகின்றது.

தமிழ்கூறு நல்லுலகம் மூன்றைனையும்
ஓர்குடைகீழ் ஆட்சி செய்தவன் எனக்
காட்டப்படும் பாட்டுடைத் தலைவன்
மன்னன் நெடுமாறன் பாண்டியன்
என்பதால் இப்
பெயர் பெற்றது போலும்.இம்மன்னன்
வாழந்த காலம் மற்றும் இந்நூல்
ஆசிரியர் தம் காலம்
எனும் வரலாற்றினை கணிக்க அவன்
ஆட்சி பற்றி இந்நூலில் காணும் இடப்
பெயர்கள்,
அவன் கீர்த்திப் பெயர்கள், வென்ற
போர்க் களங்கள் எனும் வரலாற்றுக்
குறிப்புகள்
கொண்டு அறிஞர் ஆய்ந்து அறிய
வாய்ப்புகள் பல உள்ளன. இவ்வழி

தமிழக வரலாற்றின்
ஓர் சிறு துளி அறியக்கூடும்.
இக்குறிப்புகளின் குறு தொகுதிதனைக்
கீழே நூல் முடிவினில்
காண்கமற்றும் பாடலுக்குள் சொல்
ஓவியங்களாக காணும் பயிர்-உயிர்
இனங்களின்
வருணனைகளும் மற்றைய அரிய
தொன்மைக் குறிப்புகளும்
பயனுள்ளவையே

நூலடைவு

களவு - 001 >> 239 = 239
கற்பு - 240 >> 325 = 86
ஆக . . . . . . . . . . . . .= 325

நூல்

# 1 களவு

பூமரு கண்ணினை வண்டாப் புணர்
மெல் முலை அரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்
செந்நிலத்தை வென்ற
மாமரு தானை எம் கோன் வையை வார்
பொழில் ஏர் கலந்த
காமரும் பூங்கொடி கண்டே களித்த எம்
கண் இணையே 1

உரை உறை தீந் தமிழ் வேந்தன் உசிதன்
தென்னாட்டு ஒளி சேர்
விரை உறை பூம்பொழில் மேல் உறை
தெய்வம் கொல் அன்றி விண் தோய்
வரை உறை தெய்வம் கொல் வான்
உறை தெய்வம்கொல் நீர் மணந்த
திரை உறை தெய்வம் கொல் ஐயம்
தரும் இத் திருநுதலே 2

பா அடியானைப் பராங்குசன் பாழிப்
பகை தணித்த
தூ வடிவேல் மன்னன் கன்னித் துறை
சுரும்பார் குவளைப்
பூ அடி வாள் நெடும் கண் இமைத்தன
பூமி தன் மேல்
சேவடி தோய்வ கண்டேன் தெய்வம்
அல்ல அளிச் சேயிழையே 3

வேறும் என நின்று இகல் மலைந்தார்
விழிஞத்து விண் போய்
ஏறும் திறம் கண்ட கோன் தென்
பொதியில் இரும் பொழில் வாய்த்
தேறும் தகைய வண்டே சொல்லு மெல்
இயல் செந்துவர் வாய்
நாறும் தகைமையவே அணி ஆம்பல்
நறுமலரே 4

தூ உண்டை வண்டினங்காள் வம்மின்
சொல்லுமின் துன்னி நில்லாக்

கோ உண்டை கோட்டாற்று அழிவித்த
கோன் கொங்க நாட்ட செங்கேழ்
மா உண்டை வாட்டிய நோக்கி தன் வார்
குழல் போல் கமழும்
பூ உண்டை தாம் உளவோ நுங்கள்
கானல் பொழிவிடத்தே 5

இரும் கழல் வானவன் ஆற்றுக்குடியில்
கல் சாய்ந்து அழியப்
பெரும் கழல் வீக்கிய பூழியன் மாறன்
தென் பூம் பொதியில்
மருங்கு உழலும் களி வண்டினங்காள்
உரையீர் மடந்தை
கருங்குழல் நாறும் என் போது உளவோ
நும் கடிபொழிலே 6

விண்டே எதிர்ந்த தெவ் வேந்தர் பட
விழிஞத்து வென்ற
ஒண்தேர் உசிதன் என் கோன்
கொல்லிச்சாரல் ஒளி மலர்த் தாது

உண்டே உழல்வாய் அறிதி அன்றே
உளவேல் உரையாய்
வண்டே மடந்தை குழல்போல் கமழும்
மதுமலரே 7

பொரும் கழல் வானவர்க்காய் அன்று
பூலந்தைப் போர் மலைந்தார்
ஒரும் கழல் ஏற என்றான் கொல்லிச்
சாரல் ஒண்போதுகள் தம்
மருங்கு உழல்வாய் நீ அறிதி வண்டே
சொல் எனக்கு மங்கை
கருங்குழல் போல் உளவோ விரை
நாறும் கடிமலரே 8

தேற்றம் இல்லாத தெவ் வேந்தரைச்
சேவூர் செரு அழித்துக்
கூற்றம் அவர்க்கு ஆயவன் கொல்லிச்
சாரல் கொங்கு உண்டு உழல்வாய்
மாற்றம் உரை நீ எனக்கு வண்டே
மங்கை வார் குழல் போல்

நாற்றம் உடைய உளவோ அறியும்
நறுமலரே 9

மின்னின் பொலிந்த செவ்வேல்
வலத்தான் விழிஞத்து எதிர்ந்த
மன்னிற்கு வானம் கொடுத்த செங்கோல்
மன்னன் வஞ்சி அன்னாய்
நின்னின் பிரியேன் பிரியினும்
ஆற்றேன் நெடும் பணைத் தோள்
பொன்னின் பசந்து ஒளி வாட
என்னாங்கொல் புலம்புவதே 10

அணி நிற நீள் முடி வேந்தரை
ஆற்றுக்குடி அழியத்
துணி நிற வேல் வலம் காட்டிய மீனவன்
தொண்டி அன்ன
பிணி நிற வார் குழல் பெய் வளைத்
தோளி நின்னைப் பிரியேன்
மணி நிறம் பொன் நிறம் ஆக என் ஆவி
வருந்துவதே 11

பொன் ஆர் புனைகழல் பூழியன்
பூலந்தைப் பூ அழிய
மின் ஆர் அயில் கொண்ட வேந்தன்
விசாரிதன் வெண்திரை மேல்
முன் நாள் முதல் அறியா வண்ணம்
நின்ற பிரான் முசிறி
அன்னாய் பிரியேன் பிரியினும்
ஆற்றேன்அழுங்கற்கவே 12

பா அணை இன் தமிழ் வேந்தன்
பராங்குசன் பாழி வென்ற
வேவணை வெம் சிலையான் வஞ்சி
அன்ன இனையல் எம் ஊர்த்
தூ வண மாடச் சுடர் தோய் நெடும்
கொடி துன்னி நும் ஊர்
ஆவணவீதி எல்லாம் நிழல் பாய நின்று
அணவருமே 13

திணி நிற நீள்தோள் அரசு உகத்தென்ன
நறையாற்று மின்ஆர்

துணி நிற வேல் கொண்ட கோன்
தொண்டி அன்னாய் துயரல் எம் ஊர்
மணி நிற மாடத்து மாட்டிய வான் சுடர்
மாலை நும் ஊர்
அணி நிற மாளிகை மேல் பகல் பாரித்து
அணவருமே 14

ஒன்றக் கருதா வயவர் நறையாற்றுடன்
அழிந்து
பொன்றப் படை தொட்ட கோன்
புனநாடு அனையாய் நுமர்கள்
குன்றத்து இடை புனம் காவல் இட்ட
குரூஉச் சுடர் எம்
மன்றத்து இடை இருள் நீக்கும் படித்து
எங்கள் வாழ்பதியே 15

சேல் அங்கு உளர் வயல் சேவூர் எதிர்
நின்ற சேரலனை
மாலம் கடைவித்த மன்னன் வரோதயன்
வஞ்சி அன்ன

ஏலம் கமழ் குழல் ஏழை எம் ஊர் எழில்
மாடத்து உச்சிச்
சூலம் துடைக்கும் நும் ஊர் மணிமாடத்
துகில் கொடியே 16

சின வேல் வலம் கொண்டு செந்நிலத்து
ஏற்ற தெவ் வேந்தர்கள் போய்
இன வேய் நரல் குன்றம் ஏற என்றோன்
இரும் தண் சிலம்பின்
புன வேய் அனைய மென் தோளிதன்
ஆகம் புணர்ந்தது எல்லம்
கனவே நனவாய் விடினும் எய்தாது
இனிக் கண் உறவே 17

இருநிலம் காரணம் ஆக நறையாற்று
இகல் மலைந்த
பொருநில வேந்தரைப் பொன் உலகு
ஆள்வித்த பூ முக வேல்
பெருநிலம் காவலன் தென் புனல் நாடு
அன்ன பெண் அணங்கின்

திரு நலம் சேர்ந்தது எல்லாம் கனவே
என்று சிந்திப்பனே 18

கைஏர் சிலை மன்னர் ஓடக் கடையல்
தன் கண் சிவந்த
நெய் ஆர் அயில் கொண்ட நேரியன்
கொல்லி நெடும் பொழில்வாய்
மை ஏர் தடம் கண் மடந்தை மெல்
ஆகம் புணர்ந்து எல்லாம்
பொய்யே இனி மெய்மை ஆயினும்
இல்லைப் புணர் திறமே 19

தேயத்தவர் உயிரைப் புலன் அன்று
என்பர் செந்நிலத்தைக்
காயக் கனன்று எரிந்தார் மருமத்துக்
கடும் கணைகள்
பாயச் சிலை தொட்ட பஞ்சவன்
வஞ்சிப் பைம் பூம் பொழில்வாய்
ஆயத்திடை இதுவோ திரிகின்றது என்
ஆருயிரே 20

இன் உயிர் கண்டறிவார் இல்லை என்பர் இகல் மலைந்தோர்
மன் உயிர் வான் சென்று அடையக் கடையல் உள் வென்று வையம்
தன் உயிர் போல் நின்று தாங்கும் எம் கோன் கொல்லித் தாழ் பொழில்வாய்
என் உயிர் ஆய்த்திடை இதுவோ நின்று இயங்குவதே 21

நீடிய பூந்தண் கழனி நெல்வேலி நகர் மலைந்தார்
ஓடிய ஆறு கண்டு ஒண்சுடர் வைவேல் உறை செறிந்த
ஆடு இயல் யானை அரிகேசரி தெவ்வர் போல் அழுங்கி
வாடிய காரணம் என்னை கொல்லோ உள்ளம் வள்ளலுக்கே 22

வண்டுறை வார் பொழில் சூழ்
நறையாற்று மன் ஓட வை வேல்

கொண்டு உறை நீக்கிய தென்னவன்
கூடல் கொழும் தமிழின்
ஒண் துறை மேல் உள்ளம் ஓடியதோ
அன்றி உற்றது உண்டோ
தண் துறைவா சிந்தை வாடி என்னாம்
கொல் தளர்கின்றதே 23

தெவ்வாய் எதிர் நின்ற சேரலர்
கோனைச் செருக்கழித்துக்
கைவான் நிதியம் எல்லாம் உடனே
கடையல் கவர்ந்த
நெய்வாய் அயில் நெடுமாறன் பகை
போல் நினைந்து பண்டை
ஒவ்வா உருவும் மொழியும் என்னோ
வள்ளல் உள்ளியதே 24

அளை ஆர் அரவின் குருளை அணங்க
அறிவு அழிந்து
துளை ஆர் நெடும் கைக் களிறு நடுங்கித்
துயர்வது போல்

வளை ஆர் முனை எயில் தார் மன்னன்
மாறன் வண் கூடல் அன்ன
இளையார் ஒருவர் அணங்க நைந்தால்
யான் நினைகின்றதே 25

அலை ஆர் கழல் மன்னர் ஆற்றுக்குடி
அழல் ஏறச் செற்ற
கொலை ஆர் வேல் படைக் கொற்றவன்
கூடல் அன்னார் ஒருவர்
முலையாய் முகிழ்த்து மென் தோளாய்ப்
பணைத்து முகத்து அனங்கன்
சிலையாய் குனித்துக் குழலாய் சுழன்றது
என் சிந்தையே 26

பொரு நெடும் தானைப் புல்லார்தமைப்
பூலந்தைப் பூ அழித்த
பரு நெடும் திண் தோள் பராங்குசன்
கொல்லிப் பனிவரை வாய்த்
திரு நெடும் பாவை அனையவள்
செந்தாமரை முகத்துக்

கரு நெடும் கண் கண்டு மீண்டு இன்று
சென்றது என் காதன்மையே 27

ஆய்கின்ற தீம்தமிழ் வேந்தன் அரிகேசரி
அணி வான்
தோய்கின்ற முத்தக் குடை மன்னன்
கொல்லியம் சூழ் பொழில்வாய்
ஏய்கின்ற ஆயத்திடை ஓர் இளங்கொடி
கண்டேன் உள்ளம்
தேய்கின்றது என்பது அழகியது
அன்றோ சிலம்பனுக்கே 28

தண்தேன் நறை நறும் தார் மன்னர்
ஆற்றுக்குடி தளரத்
திண்தேர் கடாய் செற்ற கொற்றவன்
கொல்லிச் செழும் பொழில்வாய்
வண்டுஏர் நறுங்கண்ணி ஆயம் கொள்
மாதர் மதிமுகம் நீ
கண்டு ஏர் தளரின் நல்லார் இனியார்
இக் கடலிடத்தே 29

விண்டு ஆர்பட விழிஞக் கடல் கோடி
வேல் வலங்கைக்
கொண்டான் குடை மன்னன் கொல்லிக்
குடவரைக் கொம்பர் ஒக்கும்
வண்டார் குழல் மடமங்கை மதர்வை
மென்நோக்கம் என்போல்
கண்டார் உளரோ உரையார் பிறவி
அன்ன கட்டுரையே 30

விண்டு அலங்கு எ·கொடு வேணாட்டு
எதிர் நின்ற வேந்து அவித்து இம்
மண்தலம் காக்கின்ற மான்தேர்
வரோதயன் வஞ்சி அன்னாள்
குண்டலம் சேர்த்த மதி வால் முகத்த
கொழும் கயல் கண்
கண்டிலீர் கண்டால் உரையீர் உரைத்த
இக் கட்டுரையே 31

மண் கொண்டு வாழ வலித்து வந்தார்
தம் மதன் அழித்துப்

புண் கொண்ட நீர் மூழ்கப் பூலந்தை
வென்றான் புகார் அனைய
பண் கொண்ட சொல் அம் மடந்தை
முகத்துப் பைம் பூம் குவளை
கண் கண்ட பின் உரையீர் உரைத்த
இக்கட்டுரையே 32

வன் தாள் களிறு கடாஅ அன்று
வல்லத்து மன் அவியச்
சென்றான் கருங்கயல் சூட்டிய சென்னிச்
செம்பொன் வரைபோல்
நின்றான் நிறையும் அறிவும் கலங்கி
நிலைதளரும்
என்றால் தெருட்ட வல்லார் இனி யார்
இவ் இரு நிலத்தே 33

வல்லிச் சிறு மருங்குல் பெருந் தோள்
மடவார் வடுக்கண்
புல்லிப் பிரிந்து அறியாத மந்தாரத்து
எம்கோன் புனநாட்டு

அல்லித் தடம் தாமரை மலரோ அவன் தண் அளியார்
கொல்லிக் குடவரையோ அண்ணல் கண்டது அக் கொம்பினையே 34

கண்டார் மகிழும் கடி கமழ் தாமரையோ கடையல்
விண்டார் விழு நிதிக் குப்பையும் வேழக் குழாமும் வென்று
கொண்டான் மழை தவழ் கொல்லிக் குடவரையோ உரை நின்
ஒண் தார் அகலம் மெலிவித்த மாதர் உறை இடமே 35

அடி வண்ணம் தாமரை ஆடு அரவு அல்குல் அரத்த மங்கை
கொடி வண்ண நுண் இடை கொவ்வைச் செவ்வாய் கொங்கைக் கோங் கரும்பின்
படி வண்ணம் செங்கோல் பராங்குசன் கொல்லிப் பனிவரை வாய்

வடி வண்ண வேல் கண்ணினால்
என்னை வாட்டிய வாள் நுதற்கே 36

திருமா முகத் திங்கள் செங்கயல்
உண்கண் செம்பொன் சுணங்கு ஏர்
வருமா மணிச் செப்பிணை வானவன்
கானம் உன்னக்
குருமா நெடுமதில் கோட்டாற்று அரண்
கொண்ட தென்னன் கன்னிப்
பெருமான் வரோதயன் கொல்லியம்
சாரல் பெண் கொடிக்கே 37

கடித்தடம் விண்ட கமலம் முகம்
கமலத்து அரும்பு ஏர்
பொடித்து அடங்கா முலை பூலந்தைத்
தெம் மன்னர் பூ அழிய
இடித்து அடங்கா உரும் ஏந்திய கோன்
ஈர்ம் பொழில்வாய்
வடித் தடம் கண் இணையால் என்னை
வாட்டிய வாள் நுதற்கே 38

தண்தாது அலர் கண்ணி அண்ணல் தன்
உள்ளம் தளர்வு செய்த
வண்டார் குழலவளே இவள் மால் நீர்
மணற்றி மங்கை
விண்டார் உடல் குன்றம் ஏறி விழிகள்
கழுது உறங்கக்
கண்டான் பொதியில் அதுவெ அவன்
சொன்ன கார்ப் புனமே 39

சினமும் அழிந்து செரு இடை தோற்ற
தெவ் வேந்தர்கள் போய்க்
கனவும்படி கடையல் செற்ற வேந்தன்
கனம் குழலார்
மனமுமம் வடிக்கண்ணும் தங்கு
மந்தாரத்து மன்னன் கொல்லிப்
புனமும் இது இவளே அவன் தான்
கண்ட பூங்கொடியே 40

இரு நெடும் தோள் அண்ணலே
பெரியான் வல்லத்து எற்ற தெவ்வர்

வரு நெடும் தானையை வாட்டிய
கோன் கொல்லி மால்வரை வாய்த்
திரு நெடும் பாவை அனையவள்
செந்தாமரை முகத்துக்
கரு நெடும் கண் கண்டு மற்று வந்தாம்
எம்மைக் கண்ணுற்றதே 41

பெரிய நிலைமை அவரே பெரியர்
பிறை எயிற்றுக்
கரிய களிறு உந்தி வந்தார் அவியக்
கடையல் வென்ற
வரிய சிலை மன்னன் மான் தேர்
வரோதயன் வஞ்சி அன்னாள்
அரிய மலர் நெடும் கண் கண்டு மால்
அண்ணல் ஆற்றியதே 42

மின்நேர் ஒளி முத்த வெண்மணல் மேல்
விரை நாறு புன்னைப்
பொன்நேர் புதுமலர் தாய்ப் பொறி
வண்டு முரன்று புல்லா

மன் ஏர் அழிய மணற்றி வென்றான்
கன்னிஆர்துறைவாய்த்
தன்நேர் இலாத தகைத்தின்றி யான்
கண்ட தாழ் பொழிலே 43

களி மன்னு வண்டுளர் கைதை வளாய்க்
கண்டல் விண்டு தண்தேன்
துளி மன்னு வெண் மணல் பாயினதே
சுடர் ஓர் மருமான்
அளி மன்னு செங்கோல் அதிசயன்
ஆற்றுக்குடியுள் வென்ற
ஒளி மன்னு முத்தக் குடைமன்னன்
கன்னி உயர் பொழிலே 44

தேன் உறை பூங்கண்ணிச் சேரலன்
சேவூர் அழியச் செற்ற
ஊன் உறை வைவேல் உசிதன்தன்
வைகை உயர் மணல்மேல்
கான் உறைப் புன்னைப் பொன் நேர்
மலர் சிந்திக் கடி கமழ்ந்து

வான் உறைத் தேவரும் மேவும் படித்து
அங்கோர் வார்பொழிலே 45

மேவி ஒன்னாரை வெண்மாத்து
வென்றான் கன்னி வீழ் பொழில்வாய்
தேவி என்றாம் நின்னை யான்
நினைக்கின்றது சேயரியாய்
காவி வென்றாய கண்ணாய்
அல்லேயேல் ஒன்று கட்டுரையாய்
ஆவி சென்றால் பின்னை யாரோ
பெயர்ப்பர் அகலிடத்தே 46

திரை உறை வார் புனல் சேவூர் செரு
மன்னர் சீர் அழித்த
உரை உறை தீம் தமிழ் வேந்தன் உசிதன்
ஒண் பூம் பொதியில்
வரை உறை தெய்வம் என்று எற்க
அல்லையேல் உன் தன் வாய் திறவாய்
விரை உறை கோதை உயிர் செல்லின்
யார் பிறர் மீட்பவரே 47

அரும்பு உடைத் தொங்கல் செங்கோல்
அரிகேசரி கூடல் அன்ன
சுரும்பு உடைக் கோதை நல்லாய்
இவர்க்குத் துயர் செய்யும் என்று உன்
பெரும் புடைக்கண் புதைத்தாய்
புதைத்தாய்க்கு நின் பேர் ஒளி சேர்
கரும்பு உடைத் தோளும் அன்றோ
எனது உள்ளம் கலக்கியதே 48

தேம் தண் பொழில் அணி சேவூர்
திருந்தார் திறல் அழித்த
வேந்தன் விசாரி தன் தெவ்வரைப்
போல் மெலிவிக்கும் என்று உன்
பூம் தடம் கண் புதைத்தாய்
புதைத்தாய்க்கு உன் பொரு வில்
செங்கேழ்க்
காந்தள் விரலும் அன்றோ எம்மை
உள்ளம் கலக்கியதே 49

ஆமாறு அறிபவர் யாரோ விதியை அம்

தீம் தமிழ்நர்
கோமான் குல மன்னர் கோன்
நெடுமாறன் கொல்லிச் சிலம்பில்
ஏமாண் சிலை நுதல் ஏழையை முன்
எதிர் பட்டு அணைந்த
தூ மாண் இரும் பொழிலே இன்னும்
யான் சென்று துன்னுவனே 50

பெரும்பான்மையும் பெறுதற்கு அரிதாம்
விதி பேணி நில்லாப்
பொரும் பார் அரசரை பூலந்தை
வாட்டிய கோன் பொதியில்
கரும்பு ஆர் மொழி மட மாதரைக்
கண்ணுற்று முன் அணைந்த
சுரும்பு ஆர் இரும் பொழிலே இன்னும்
யான் சென்று துன்னுவனே 51

துனிதான் அகல மண் காத்துத் தொடு
பொறி ஆய கெண்டை
பனிதாழ் வட வரை மேல் வைத்த

பஞ்சவன் பாழி வென்ற
குனி தாழ் சிலை மன்னன் கூடல்
அன்னாளது கூடலைப் போல்
இனிதாய் எனது உள்ளம் எல்லாம்
குளிர்வித்த தீம் பொழிலே 52

தேர் மன்னு தானை பரப்பித் தென்
சேவூர் செரு மலைந்த
போர் மன்னர் தம்மைப் புறம் கண்டு
நாணிய பூம் கழல் கால்
ஆர் மன்னு வேல் அரிகேசரி அம் தண்
புகார் அனைய
ஏர் மன்னு கோதையைப் போல்
இனிதாயிற்று இவ் ஈர்ம் பொழிலே 53

நீரில் மலிந்த செவ்வேல் நெடுமாறன்
நெல்வேலி ஒன்னார்
போரில் மலிந்த வெம் தானை உரம்
கொண்ட கோன் பொதியில்
காரில் மலிந்த பைம் பூம் புனம்

காக்கின்ற காரிகையீர்
ஊரின் பெயரும் நும் போரும் அறிய
உரைமின்களே 54

நிதியின் கிழவன் நிலமகள் கேள்வன்
நெல்வேலி ஒன்னார்
கதியின் மலிந்த வெம் மாவும் களிறும்
கவர்ந்து கொண்டான்
பொதியில் மணிவரைப் பூம் புனம்
காக்கும் புனை இழையீர்
பதியின் பெயரும் நும் போரும் அறிய
பகர்மின்களே 55

அறை ஆர் கழல் மன்னர் ஆற்றுக்குடி
அமர் சாய்ந்து அழியக்
கறை ஆர் அயில் கொண்ட கோன்
கொல்லிக் கார் புனம் காக்கின்ற வான்
பிறை ஆர் சிறு நுதல் பெண்ணார்
அமுது அன்ன பெய் வளையீர்
மறையாது உரைமின் எமக்கு நும்

பேரொடு வாழ் பதியே 56

கறையில் மலிந்த செவ்வேல் வலத்தால்
தென் கடையல் வென்ற
அறையும் கழல் அரிகேசரி அம் தண்
புகார் அனைய
பிறையில் மலிந்த சிறு நுதல் பேர்
அமர்க்கண் மடவீர்
உறையும் பதியும் நும் பேரும் அறிய
உரைமின்களே 57

வருமால் புயல் வண்கை மான் தேர்
வரோதயன் மண் அளந்த
திருமாலவன் வஞ்சி அன்ன அம் சீரடிச்
சேயிழையீர்
கருமால் வரை அன்ன தோற்றக்
கருங்கை வெண் கோட்ட செங்கண்
பொரு மால் களிறு ஒன்று போந்தது
உண்டோ உன்தன் புனத்து அயலே 58

கண்ணுற்று எதிர்ந்த தெவ் வேந்தர்
படைக் கடையல் கொடி மேல்
விண்ணுற்ற கோள் உரும் ஏந்திய
வேந்தன் வியன் பொதியில்
பண்ணுற்ற தேமொழிப் பாவை நல்லீர்
ஓர் பகழி மூழ்கப்
புண்ணுற்ற மா ஒன்று போந்தது
உண்டோ நும் புனத்து அயலே 59

முடி உடை வேந்தரும் மும்மத
யானையும் மொய் அமருள்
பொடி இடை வீழத் தென் பூலந்தை
வென்றான் புகார் அனைய
வடி உடை வேல் நெடுங்கண் மடவீர்
நுங்கள் வார் புனத்தில்
பிடியடு போந்தது உண்டோ உரையீர்
ஓர் பெருங் களிறே 60

சின மாண் கடல் படைச் சேரலன் தென்
நறையாற்று வந்து

மன மாண் பகழி வை வேல் கொண்ட
கோன் வையை நாடு அனைய
கன மாண் வன முலைக் கை ஆர் வரி
வளைக் காரிகையீர்
இன மான் புகுந்ததுவோ உரையீர்
இரும் புனத்தே 61

சிலை மாண் படை மன்னர் செந்நிலத்து
ஓட செரு விளைந்த
கொலை மாண் அயில் மன்னன் தென்
புனல் நாடு அன்ன கோல் வளையீர்
இலை மாண் பகழியின் ஏ உண்டு தன்
இனத்தில் பிரிந்தோர்
கலை மான் புகந்தது உண்டோ உரையீர்
நுங்கள் சீர புனத்தே 62

வெல்லும் திறம் நினைந்து தேற்றார்
விழிஞத்து விண் படரக்
கொல்லில் மலிந்த செவ்வேல் கொடை
வேந்தன் கொல்லிச் சாரலின் தேன்

புல்லும் பொழில் இள வேங்கையின் கீழ் நின்ற பூங்குழலீர்
செல்லும் நெறி அறியென் உரையீர் நும் சிறுகுடிக்கே 63

தன்னும் புரையும் மழை உரும் ஏறு தன் தானை முன்னால்
துன்னும் கொடி மிசை ஏந்திய கோன் கொல்லிச் சூழ் பொழில்வாய்
மின்னும் கதிர் ஒளி வாள் முகத்தீர் என் வினா உரைத்தால்
மன்னும் சுடர் மணி போந்து உகுமோ நுங்கள் வாய் அகத்தே //64

விரை ஆடிய கண்ணி வேந்தன் விசாரி தன் கொல்லி விண் தோய்
வரை ஆடிய புனம் காவலும் மானின் வழி வரவும்
நிரை ஆடிய குழலாட்கும் இவற்கும் நினைப்பின் இல்லை

உரை ஆடுவர் கண்ணினான் உள்ளத்து
உள்ளதும் ஒன்று உளதே 65

பெரும் கண்ணி சூடிவந்தார் படப்
பூலந்தைப் பொன்முடிமேல்
இரும் கண்ணி வாகை அணிந்தான்
பொதியல் இரும் பொழில்வாய்
மருங்கண்ணி வந்த சிலம்பன் தன்
கண்ணும் இவ்வாள் நுதலாள்
கருங் கண்ணும் தம்மில் கலந்துண்டாம்
இங்கு ஓர் காரணமே 66

தேர் மன்னு வாள் படை செந்நிலத்து
ஓடச் செரு விளைத்த
போர் மன்னன் தென்னன் பொதியில்
புனமா மயில் புரையும்
ஏர் மன்னு காரிகை எய்தல் உண்டாம்
எனின் யானும் நின் போல்
நீர் மன்னும் நீல நெடும் சுனை ஆடுவன்
நேரிழையே 67

புண்தான் அருநிறத்து உற்றுத் தென்
பூலந்தைப் போர் மலைந்த
ஒண் தார் அரசர் குழாமும் உடனே ஒளி
வான் அடையக்
கண்டான் பொதியில் மயில் அன்ன
காரிகை எய்தல் நின் போல்
உண்டாம் எனில் தையல் ய¨னும்
சென்று ஆடுவன் ஒள் சுனையே 68

திருமால் அகலம் செஞ்சாந்து அணிந்து
அன்ன செவ்வான் முகட்டுக்
கருமா மலர்க்கண்ணி கை தொழ
தோன்றிற்று காண் வந்து ஒன்னார்
செரு மால் அரசு உகச் செந்நிலத்து
அட்ட தென் தீம் தமிழ்நர்
பெருமான் தன் குல முதலாய பிறைக்
கொழுந்தே 69

மண் தான் நிறைந்த பெரும் புகழ்
மாறன் மந்தாரம் என்னும்

தண் தாரவன் கொல்லித் தாழ் சுனை
ஆடியதான் அகன்றாள்
ஒள் தாமரை போல் முகத்தவள்
நின்னொடு உருவம் ஒக்கும்
வண்டு ஆர் குழலவள் வந்தால் இயங்கு
வரை அணங்கே 70

ஆள் நெடும் தானையை ஆற்றுக்குடி
வென்ற கோன் பொதியில்
சேண் நெடும் குன்றத்து அருவி நின் சே
அடி தோய்ந்தது இல்லை
வாள் நெடும் கண்ணும் சிவப்பச்
செவ்வாயும் விளர்ப்ப வண்டு ஆர்
தாள் நெடும் போது அவை சூட்ட
அற்றோ அத் தடம் சுனையே 71

கலவா வயவர் களத்தூர் அவியக் கணை
புதைத்த
குலவு ஆர் சிலை மன்னன் கோன்
நெடுமாறன் தென்கூடல் அன்ன

இலவு ஆர் துவர் வாய் மடந்தை நம்
ஈர்ம் புனத்து இன்று கண்டேன்
புலவு ஆர் குருதி அளைந்த வெம்
கோட்டு ஓர் பொரு களிறே 72

பொருது இவ்உலகம் எல்லாம் பொது
நீக்கிப் புகழ் படைத்தல்
கருதி வந்தார் உயிர் வான் போய்
அடையக் கடையல் வென்ற
பரிதி நெடு வேல் பராங்குசன்
கொல்லிப் பைம் பூம் புனத்துக்
குருதி வெண் கோட்டது கண்டேன்
மடந்தை ஓர் குஞ்சரமே 73

கந்து ஆர் அடு களிறு யானைக் கழல்
நெடுமாறன் கன்னிக்
கொந்தாடு இரும் பொழில்வாய்ப்
பண்ணை ஆயத்துக் கோல மென் பூப்
பந்து ஆடலின் இடை நொந்துகொல்
பைங்குழல் வெண்மணல் மேல்

வந்து ஆடலின் அடி நொந்துகொல்
வாள்நுதல் வாடியதே 74

பொருந்திய பூந்தண் புனல்தான்
குடைந்துகொல் பென்கயிற்றுத்
திருந்திய ஊசல் சென்றுஆடிகொல்
சேவூர் செரு அடர்ந்த
பருந்து இவர் செஞ்சுடர் வெல்வேல்
பராங்குசன் பற்றலர் போல்
வருந்திய காரணம் என்னைகொல்லோ
மற்று இவ் வாள் நுதலே 75

மழையும் புரை வண்கை வானவன்
மாறன் மை தோய் பொதியில்
வழையும் கமழும் மணி நெடும் கோட்டு
வண் சந்தனத்தின்
தழையும் விரை தரு கண்ணியும் ஏந்தி
இத் தண் புனத்தில்
நுழையும் பிரியல் உறான் அறியேன்
இவன் உள்ளியதே 76

திண் பூ முக நெடுவேல் மன்னர் சேவூர்
பட முடி மேல்
தண் பூ மலர் தும்பை சூடிய தார்
மன்னன் நேரி என்னும்
வண் பூஞ்சிலம்பின் வரைப் புனம்
நீங்கான் வரும் சுரும்பு ஆர்
ஒண் பூந்தழையும் தரும் அறியேன்
இவன் உள்ளியதே 77

செறிந்தார் கருங்கழல் தென்னவன்
செந்நிலத்தைச் செருவில்
மறிந்தார் புறம் கண்டு நாணிய கோன்
கொல்லிச் சாரல் வந்த
நெறிந்தார் கமழ் குஞ்சியானோடு இவள்
இடை நின்றதெல்லாம்
அறிந்தேன் பல நினைந்து என்னை
ஒன்றே இருவர் ஆருயிரே 78

வண்ண மலர்த் தொங்கல் வானவன்
மாறன் வை வேல் முகமும்

கண்ணும் சிவப்பக் கடையல்
வென்றான் கடல் நாடு அனைய
பண்ணும் புரை சொல் இவட்கும்
இவற்கும் பல நினைந்து இங்கு
எண்ணும் குறை என்னை ஒன்றே
இருவர்க்கும் இன் உயிரே 79

படல் ஏறிய மதில் மூன்று உடைப்
பஞ்சவன் பாழி வென்ற
அடல் ஏறு அறில் மன்னன் தெம் முனை
போல் மெலிந்து ஆடவர்கள்
கடல் ஏறிய கழி காமம் பெருகக் கரும்
பனையின்
மடல் ஏறுவர் மற்றும் செய்யாதன
இல்லை மாநிலத்தே 80

பொரு நெடும் தானைப் புல்லார்
தம்மைப் பூலந்தைப் போர் தொலைத்த
செரு நெடு செஞ்சுடர் வேல்
நெடுமாறன் தென் நாடு அனையாய்

அரு நெடும் காமம் பெருகுவதாய்
விடின் ஆடவர்கள்
கரு நெடும் பெண்ணைச் செங்கேழ்
மடல் ஊரக் கருதுவரே 81

தலமன்னு புள்ளினம் பார்ப்பும்
சினையும் அவை அழிய
உலமன்னு தோள் அண்ணல் ஊரக்
கொளாய்கொல் ஒலிதிரை சூழ்
நில மன்னன் நேரியன் மாறன்
நெடுங்களத்து அட்ட திங்கள்
குல மன்னன் கன்னிக் குலை வளர்
பெண்ணைக் கொழு முதலே 82

அண்ணல் நெடும் தேர் அரிகேசரி அகல்
ஞாலம் அன்னாள்
வண்ணம் ஒருவாறு எழுதினும் மா மணி
வார்ந்தனைய
தண் என் கரும் குழல் நாற்றமும் மற்று
அவள்தன் நடையும்

பண் என் மொழியும் எழுத உளவோ
படுச்சந்தமே 83

களி சேர் களிற்றுக் கழல் நெடுமாறன்
கடையல் வென்ற
தெளி சேர் ஒளி முத்த வெண் குடை
மன்னன் தென்னாடு அனையாள்
கிளி சேர் மொழியும் கருங் குழல்
நாற்றமும் கேட்பின் ஐய
எளிதே எழுத எழுதிப்பின் ஊர்க எழில்
மடலே 84

வில்தான் எழுதிப் புருவக் கொடி என்றீர்
தாமரையின்
முற்றா முகை நீர் எழுதி முலை என்றீர்
மொய் அமருள்
செற்றார் படச் செந்நிலத்தை வென்றான்
தென்னன் கூடல் அன்னனாள்
சொல்தான் ஏனக் கிள்ளையோ நீர்
எழுதத் துணிகின்றதே 85

ஓங்கும் பெரும் புகழ் செங்கோல்
உசிதன் உறுகலியை
நீங்கும்படி நின்ற கோன் வையைவாய்
நெடு நீரிடையாள்
தாங்கும் புணையடு தாழும் தண் பூம்
புனல் வாய் ஒழுகின்
ஆங்கும் வரும் அன்னதால் இன்ன நாள்
அவள் ஆர் அருளே 86

காடு ஆர் கரு வரையும் கலி வானும்
கடையல் சென்று
கூடார் செலச் செற்ற கோன் நெடுமாறன்
தென் கூடல் அன்ன
ஏடு ஆர் மலர்க் குழலாள் எங்கு
நிற்பினும் என்னை அன்றி
ஆடார் புனலும் மேல் ஊசலும் ஈது
அவள் ஆர் அருளே 87

பா மாண் தமிழுடை வேந்தன்
பராங்குசன் கொல்லிப் பைம் பூந்

தேமாந் தழையடு கண்ணியும்
கொண்டுச் செழும் புனத்தில்
ஏ மாண் சிலை அண்ணல் வந்து
நின்றார் பண்டு போல இன்று
பூ மாண் குழலாய் அறியேன் உரைப்பது
ஓர் பொய்ம் மொழியெ 88

கொடி ஆர் நெடு மதில் கோட்டாற்று
அரண் கொண்ட கோன் பொதியில்
கடி ஆர் புனத்து அயல் வைகலும்
காண்பல் கருத்துரையான்
அடி ஆர் கழலன் அலங்கலன்
கண்ணியன் மண் அளந்த
நெடியான் சிறுவன்கொலோ அறியேன்
ஓர் நெடுந்தகையே 89

நண்ணிய போர் மன்னர் வான் புக
நட்டாற்று அமர் விளைத்த
மண் இவர் செங்கோல் வரோதயன்
வையை நல் நாடு அனையாய்

கண்ணியன் தண்ணந் தழையன் கழலன்
கடும் சிலையன்
எண்ணியது யாதுகொல்லோ அகலான்
இவ் இரும் புனமே 90

பன்னிய தீம் தமிழ் வேந்தன்
பராங்குசன் பாழி வென்ற
மன்னிய சீர் மன்னன் கொல்லி நம் வார்
புனம் கட்டழித்துத்
தின்னிய வந்த களிறு தடிந்த சிலம்பன்
தந்த
பொன் இயல் பூண் மங்கை வாடுபவோ
மற்று இப் பூந்தழையே 91

அரை தரு மேகலை அன்னம் அன்னாய்
பண்டு அகத்தியன்வாய்
உரைதரு தீம் தமிழ் கேட்டோன் உசிதன்
ஒண் பூம் பொதியில்
வரை தரு வார் புனம் கை அகலான்
வந்து மா வினவும்

விரை தரு கண்ணியன் யாவன்கொலோ
ஓர் விருந்தினனே 92

பொரும் பார் அரசரைப் பூலந்தை
வாட்டிய கோன் பொதியில்லான்
அரும்பு ஆர் தழையும் கொண்டியான்
சொன்ன பொய்யை மெய் என்று
அகலான்
பெரும்பான்மையும் இன்று
வாராவிடான் வரின் பேர் அமர்க்கண்
சுரும்பு ஆர் கருங் குழலாய் அறியேன்
இனிச் சொல்லுவதே 93

தெம்மாண்பு அழந்து செந்தீ மூழ்கச்
சேவூர்ச் செருவில் அன்று
வெம் மாப் பணி கொண்ட வேந்தன்
தென்னாடு அன்ன மெல்லியலாய்
இம் மாந்தழையன் அலங்கலன்
கண்ணியன் யாவன்கொலோ
கைம்மா வினவாய் வந்து அகலான்

நம்தம் கடிப்புனமே 94

சிலையுடை வானவன் சேவூர் அழியச்
செரு அடர்த்த
இலை உடை வேல் நெடுமாறன் கழன்
இறைஞ்சாதவர் போல்
நிலை இடு சிந்தை வெம் நோயடு
இந்நீள் புனம் கையகலான்
முலை இடை நேர்பவர் நேரும் இடம்
இது மொய் குழலே 95

பாடும் சிறை வண்டு அறை பொழில்
பாழிப் பற்றா அரசர்
ஓடும் திறம் கொண்ட கோன் கன்னிக்
கானல் உறை துணையோடு
ஆடும் அலவன் புகழ்ந்து என்னை
நொக்கி அறிவு ஒழிய
நீடு நினைந்து சென்றான் நென்னல்
ஆங்கு ஓர் நெடும்தகையே 96

பொன்றா விரி புகழ் வானவன்
பூலந்தைப் பூ அழிய
வென்றான் வியன் கன்னி அன்னம் தன்
மென் பொடை மெய் அளிப்ப
நன்றாம் இதன் செய்கை என்று என்னை
நோக்கி நயந்து உருகி
சென்றார் ஒருவர் பின் வந்து அறியார்
இச் செழும் புனத்தே 97

கணி நிற வேங்கையும் கொய்தும்
கலாவம் பரப்பி நின்று
மணி நிற மாமயில் ஆடலும் காண்டும்
வல்லத்து வென்ற
துணி நிற வேல் மன்னன் தென்னர்
பிரான் சுடர் தோய் பொதியில்
அணி நிற மால் வரைத் தூ நீர் ஆடுதமே
98

விரை வளர் வேங்கையும் காந்தளும்
கொய்தும் வியல் அறை மேல்

நிரை வளர் மா மயில் ஆடலும்
காண்டும் நிகர் மலைந்தார்
திரை வளர் பூம் புனல் சேவூர்ப் படச்
செற்ற தென்னன் கொல்லி
வரை வளர் மா நீர் அருவியும் ஆடுதும்
வாள் நுதலே 99

சிலை மிசை வைத்த புலியும் கயலும்
சென்று ஓங்கு செம்பொன்
மலை மிசை வைத்த பெருமான்
வரோதயன் வஞ்சி அன்னாள்
முலை மிசை மென் தோள் மேல்
கடாய்த்தன் மோய் பூங்குழல்
தலை மிசை வைத்துக் கொண்டாள்
அண்ணல் நீ தந்த தழையே 100

கழுது குருதி படியக் கலிநீர்க் கடையல்
வென்ற
இழுதுபடு நெடு வேல் மன்னன் ஈர்ம்
புனல் கூடல் அன்னாள்

தொழுது தலை மிசை வைத்துக்
கொண்டாள் வண்டும் தும்பியும் தேன்
கொழுதும் மலர் நறுந்தார் அண்ணல் நீ
தந்த கொய் தழையே 101

மண்இவர் செங்கோல் வரோயதன்
வல்லத்து மாற்றலர்க்கு
விண்இவர் செல்வம் விளைவித்த
வேந்தன் விண் தோய் பொதியில்
கண் இவர் பூந்தண் சிலம்பு இடை
வாரான்மின் காப்புடைத்தால்
பண் இவர் வண்டு அறை சோலை
வளாய எம் பைம புனமே 102

புல்லா வயவர் நறையாற்று அழியப்
பொருது அழித்த
வில்லான் விளங்கு முத்தக்குடை
மன்னன் வியன் நிலத்தார்
எல்லாம் இறைஞ்ச நின்றான் கொல்லி
மல்லல் அம் சாரல் இங்கு

நில்லாது இயங்குமின் காப்படைத்தய
நீள் புனமே 103

பூவலர் தண் பொழில் பூலந்தைப் புல்லா
அரசு அழித்த
மாவலர்த் தானை வரோதயன் கொல்லி
மணி வரைவாய்
ஏவலர் திண் சிலையார் எமர் நீங்கார்
இரு பொழுதும்
காவராய் நிற்பர் வாரன்நின் நீர் இக்
கடிப் புனத்தே 104

மின்னை மறைத்த செவ்வேல் வலத்தால்
விழித்துள் ஒன்னார்
மன்னை மறைத்த எம் கோன் வையை
சூழ் பௌவ நீர் புலவம்
தன்னை மறைத்து இள ஞாழல் மகழும்
தண் பூந்துறைவா
என்னை மறைத்து இவ் இடத்திய
யாதுகொல் எண்ணியதே 105

திண் தேர் வய மன்னர் சேவூர் அகத்துச்
செரு அழியக்
கண்டே கதிர் வேல் செறித்த எம் கோன்
கொல்லிக் கார் புனத்து
வண்டு ஏய் நறுங் கண்ணி கொண்டே
குறை உற வந்ததனால்
உண்டே முடித்தல் எனக்கு மறப்பினும்
உள் அகத்தே 106

சேயே என நின்ற தென்னவன்
செந்நிலத்து ஏற்ற தெவ்வர்
போயே விசும்பு புகச் செற்ற கோன்
அம்தண் பூம் பொதியில்
வேயே அனைய மென் தோளிக்கு நின்
கண் மெலி உறு நோய்
நீயே உரையாய் விரை ஆர் அலங்கல்
நெடும்தகையே 107

புரைத்தார் அமர் செய்து பூலந்தைப்
பட்ட புல்லாத மன்னர்

குரைத்தார் குருதிப் புனல் கண்ட கொன்
கொல்லிப் பாவை அன்ன
நிரைத்தார் கரு மென் குழலிக்கு நீயே
நெடும்துறைவா
உரைத்தால் அழிவது உண்டோ சென்று
நின்று நின் உள மெலிவே 108

பொறி கெழு கெண்டை பொன் மால்
வரை வைத்து இப் பூமி எல்லாம்
நெறி கெழு செங்கோல் நடாய்
நெடுமாறன் நெல்வேலி வென்றான்
வெறி கமழ் பூம் கன்னிக் கானல்
விளையாட்டு அயர நின்ற
செறிகுழலார் பலர் யார் கண்ணதோ
அண்ணல் சிந்தனையே 109

திளையா எதிர் நின்ற தெம்மன் ஆர்
சேவூர் படச் சிறு கண்
துளை ஆர் கரும் கைக் களிறு
உந்தினான் தொண்டிச் சூழ் துறைவாய்

வளை ஆர் வனமுலையார் வண்டல்
ஆடும் வரி நெடும் கண்
இளையார் பலர் உளர் யார் கண்ணதோ
அண்ணல் இன் அருளே 110

மன்னன் வரோதயன் வல்லத்து
ஒன்னார்கட்கு வான் கொடுத்த
தென்னன் திருமால் குமரியம் கானல்
திரை தொகுத்த
மின்னும் சுடர் பவளத்து அருகே விரை
நாறு புன்னை
பொன்னம் துகள்கள் சிந்தி வானவில்
போன்றது இப் பூந்துறையே 111

கார் அணி சோலைக் கடையல் இடத்துக்
கறுத்து எதிர்ந்தார்
தோணி தானை சிதைவித்த கோன்
கன்னித் தென் துறைவாய்
நீர் அணி வெண் முத்தினால் இந்நெடு
மணல் மேல் இழைத்த

ஏர் அணி வண்டல் சிதைக்கின்றதால்
இவ் வெறி கடலே 112

பொன் அயர் வேங்கை அம் பூந்தழை
ஏந்திப் புரிந்து இலங்கு
மின் அயல் பூணினை வாரல் சிலம்ப
விழிஞுத்து ஒன்னார்
மன்னயர் எய்த வை வேல் கொண்ட
வேந்தன் நம் மாந்தை அன்னாள்
தன்னயர் தீயர் பல்கால் வருவர் இத்தண்
புனத்தே 113

பூட்டிய மா நெடும் தேர் மன்னர்
பூலந்தைப் பூ அழிய
ஒட்டிய திண் தேர் உசிதன் பொதியில்
உயர் வரைவாய்
ஈட்டியர் நாயிநர் வீணயர் வாளிநர்
எப்பொழுதும்
கோட்டிய வில்லர் குறவர் நண்ணன்மின்
இக் கொய் புனத்தே 114

ஆடு இயல் மா நெடும் தேர் மன்னர்
ஆற்றுக்குடி அழியக்
கோடிய திண் சிலைக் கோன்
நெடுமாறன் தென் கூடல் அன்னாள்
நீடிய வார் குழல் நீலமும் சூடாள்
நினைந்து நின்றான்
தோடு இயல் பூந் தொங்கலாய்
அறியேன் சென்று சொல்லுவதே 115

புள் புலம் பூம் புனல் பூலந்தைப் போர்
இடைப் பூழியர் கோன்
உள் புலமபொடு செலச் செற்ற வேந்தன்
உறந்தை அன்னாள்
கண் புலனாய்ச் செல்லும் தெய்வம்
கண்டாய் கமழ் பூம் சிலம்பா
உள்கிலன் ஆகில் எவ்வாறு மெழிவன்
இம் மாற்றங்களே 116

நடை மன்னும் என்று எம்மை நீர் வந்து
நண்ணன்மின் நீர் வளநாட்டு

இடை மன்னு செல்வர் நுமர் எமர் பாழி
இகல் அழித்த
படை மன்னன் தென் குல மாமதி போல்
பனி முத்து இலங்கும்
குடை மன்னர் கோடு உயர் கொல்லியம்
சாரல் குறவர்களே 117

உற்றவரே நுமக்கு ஒண் புனல் நாட்டு
உயர் செல்வர் செல்லின்
மற்று எமர் ஆய்விடின் வானவன்
தானுடை மான் இனையச்
செற்று அமர் சேவூர் புறம் கண்ட
திங்கள் திருக்குலத்துக்
கொற்றவன் மாறன் குடக் கொல்லி
வாழும் குறவர்களே 118

இழை வளர் பூண் அண்ணல் ஈர்ம் புனல்
நாடனை நீ எமரோ
மழை வளர் மானக் களிறு உந்தி மா நீர்க்
கடையல் வென்ற

தழை வளர் பூங் கண்ணி மூன்று உடை
வேந்தன் தண்ணம் பொதியில்
குழை வளர் ஆரத்து அருவி அம் சாரல்
குறவர்களே 119

வேழம் வினவுதிர் மென் பூந்தழையும்
கொணர்ந்து நிற்றீர்
ஆழம் உடை கருமத்தில் போகீர்
அணைந்து அகலீர்
சோழன் சுடர்முடி வானவன் தென்னன்
துன்னாத மன்னர்
தாழ மழை உரும் ஏந்திய கோன்
கொல்லித் தண் புனத்தே 120

பா உற்ற தீம் தமிழ் வேந்தன்
பராங்குசன் பாழி பற்றாக்
கோ உற்ற அல்லல் கண்டான் கொல்லிச்
சாரல் எம் கொய் புனத்துள்
ஏ உற்ற புண்ணொடு மான் வந்ததோ
என்னும் ஈர்ம் சிலம்பா

மா உற்ற புண் இருகிடு மருந்தோ நின்
கை வார் தழையே 121

வேனக நீண்ட கண்ணாளும் விரும்பும்
சுரும்பு அறற்றத்
தேனக நீண்ட வண்டு ஆர் கண்ணியாய்
சிறி துண்டு தெவ்வர்
வானகம் ஏற வல்லத்து வென்றான்
கொல்லி மால் வரைவாய்
கானக வாழ்நரும் கண்டு அறிவார் இக்
கமழ் தழையே. 122

துடி ஆர் இடை வடிவேல் கண் மடந்தை
தன் சொல் அறிந்தால்
கடி ஆர் கமழ் கண்ணியாய் கொள்வல்
யான் களத்துாரில் வென்ற
அடி ஆர் இலங்கு இலை வேல் மன்னன்
வான் ஏற அணிந்த வென்றிக்
கொடியான் மழை வளர் கொல்லியஞ்
சாரல் இக் கொய் தழையே 123

அம் கேழ் அலர் நறும் கண்ணியினாய்
அருளித் தரினும்
எம் கேழ் அவருக்கு இயைவன போலா
இருஞ்சிறை வாய்
வெம் கேழ் அயில் நலம் கொண்டவன்
விண் தோய பொதியிலின்வாய்
செங்கேழ் மலரின் தளிர் இளம்
பிண்டியின் தீம் தழையே 124

வேரித் தடம் தொங்கல் அண்ணல்
விருந்தா இருந்தமையால்
பூரித்த மெல் முலை ஏழை புனையின்
பொல்லாதுகொலாம்
பாரித்த வேந்தர் பறந்தலைக்கோடி படப்
பரிமா
வாரித்த கோமான் மண நீர் மலயத்து
மாந்தழையே 125

ஏ மாண் சிலை நுதல் ஏழையும் ஏற்கும்
இன் தேன் அகலாப்

பூ மாண் கமழ் கண்ணியாய் நின்றது
ஒன்று உண்டு பூழியர் கோன்
பா மாண் தமிழின் பராங்குசன்
கொல்லிப் பனிவரைவாய்த்
தே மாண் பொழிலின் அகத்து அன்றி
இத் தேம் தழையே 126

கைந்நிலைத்த சிலையால் கணை சிந்தி
கறுத்து எதிர்ந்தார்
செந்நிலத்துப் பட சீறிய கோன் செழும்
தண் பொதியில்
இந்நிலத்து இம்மலை மேல் ஒவ்வா
இரும் தண் சிலம்பா
எம் நிலத்து எம் மலை மேல் இச்
சந்தனத்து ஈ£ர்ந் தழையே 127

கந்து ஆர் களிறு கடாய் செந்நிலத்தைக்
கறுத்து எதிர்ந்து
வந்தார் அவிய வை வேல் கொண்ட
கோன் கன்னிவார் துறைவாய்

பந்து ஆர் விரலி தன் பாவைக்கு பைம் போது ஒருவர்
தந்தார் தர அவை கொண்டு அணிந்தாள் இத் தடம் கண்ணியே 128

திண் போர் அரசரைச் சேவூர் அழிவித்த தென்னன் நல் நீர்
மண் போல் அழிக்கும் செங்கோல் மன்னன் வையை நல் நாடு அனையாள்
கண் போல் குவளை அம் போது அங்கு ஓர் காளையை கண்டு இரப்ப
தண் போது அவன் கொடுத்தான் அணிந்தாள் இத் தடம் கண்ணியே 129

உறு கற்புடைமையின் உள்ளும் இப் பேதை உசிதன் ஒன்னார்
மறுகத்திறல் உரும் ஏந்திய கோன் கொல்லி மால் வரைவாய்த்
துறுகல் புனமும் சிதைத்து எங்கள் தம்மையும் துன்ன வந்த

சிறு கண் களிறு கடிந்து இடர் தீர்த்த
சிலம்பனையே 130

கனம் சேர் முலை மங்கை உள்ளும் இப்
போதும் கடையல் ஒன்னார்
மனம் சேர் துயர் கண்ட வானவன்
மாறன் தன் மை தோய் பொதியில்
பும் சேர் தினையும் கவர்ந்து எம்மைப்
பேகா வகை புகுந்த
சினம் சேர் களிறு கடிந்து இடர் தீர்த்த
சிலம்பனையே 131

ஓங்கிய வெண் குடைப் பைங்கழல்
செங்கோல் உசிதன் வையை
வீங்கிய தண் புனல் *ஆடி
விளையாட்டு அயர் பொழுதில்
தேங்கிய தெள் திரை வாங்க ஒழுகி நின்
சே இழையாள்
நீங்கிய போது அருள் செய்தனன் வந்து
ஓர் நெடும் தகையே 132

* 'வீங்கிய' என்பதாலும் 'விளையாட்டு' எனும் கூடிய
சொல்லாலும் ஆடிப் பெருக்கினைக் குறிப்பதாகலாம்

சில் நாள் மறந்திலம் யாமும் தென்
சேவூர் செரு மலைந்த
மன் ஆள் செலச் செற்ற வானவன்
மாறன் வையைத் து¡றவாய்
பொன் ஆர் புனல் எம்மை வாங்கும்
பொழுது அங்கு ஓர் பூங்கணை வேள்
அன்னான் ஒருவன் அணைந்து எமக்கு
செய்த ஆர் அருளே 133

வண்டு ஆர் இரும் பொழில் வல்லத்து
தென்னற்கு மாறு எதிர்ந்த
விண்டார் உடலின் மறி அறுத்து ஊட்டி
வெறி அயர்ந்து
தண் தார் முருகன் தருகின்ற வேல தண்
பூஞ்சிலம்பன்

ஒள் தார் அகலமும் உண்ணும்கொலோ
நின் உறு பலியே 134

வார் அணங்கும் கழல் வானவன் மாறன்
வண் கடல் கூடல் அன்ன
வேர் அணங்கும் இள மெல்
முலையாட்கு இரும் தண் சிலம்பன்
தார் அணங்கு ஆவது அறிந்தும்
வெறியின் கண் தாழ்ந்தமையால்
ஆர் அணங்கு ஆயினும் ஆக இச்
செவ்வேள் அறிவு இலனே 135

பொன் அணங்கு ஈர்ம் புனல் பூலந்தை
ஒன்னார் புலால் அளைந்த
மின் அணங்கு ஈர் இலை வேல்
தென்னர் கோன் இயல் நாட்டவர் முன்
தன் அணங்கு அன்மை அறிந்தும்
வெறியின்கண் தாழ்ந்தமையால்து
மன் அணங்கு ஆயினும் ஆக இச்
செவ்வேள் மதி இலனே 136

அறை வாய் அதிர் கழல் வேந்து இகல்
ஆற்றுக்குடி அழித்த
கறை வாய் இலங்கு இலை வேல்
மன்னன் கன்னி அம் கானலின் வாய்
இறை வாய் அணி வளையாய் என்னை
கொல்லோ இரவின் எல்லாம்
துறை வாய் இளம் புன்னை மேல்
அன்னம் ஒன்றும் துயின்றிலவே 137

பூ நின்ற வேல் மன்னன் பூலந்தை வான்
புக பூட்டழித்த
வேல் நின்ற வெம் சிலை வேந்தன்
இரணாந்தகன் அறியும்
பால் நின்ற இன் தமிழ் அன்ன நல்லாய்
நம்மை பைங் கானலின்வாய்த்
தூய் நின்ற மென் சிறகு அன்னம் இன்று
ஒன்றும் துயின்றிலவே 138

ஒளி ஆர் திரு நுதலாளை எளியள்
என்று உன்னி வந்து

விளியா வரும் துயர் செய்தமையால்
விழிஞுத்து வென்ற
களி ஆர் களிற்றுக் கழல் நெடுமாறன்
கடி முனை மேல்
தெளியா வயவரில் தேய்வாய் அளிய
என் சிந்தனையே 139

ஏர்ஆர் குழல் மடவாளை எளியள்
என்று உன்னி வந்து
தீரா விழுமம் தந்தாய் தென்னன் சேவூர்
செரு அடர்த்த
கார் ஆர் களிற்றுக் கழல் மன்னன்
மாறன் கழல் பணிந்து
சேரா வயவரில் தேய்வாய் அளிய என்
சிந்தனையே 140

மருள் போல சிறை வண்டு பாட நிலவு
அன்ன வார் மணல் மேல்
இருள் போல் கொழு நிழல் பாய்
அறிந்தார்கட்கு இன் தீம் தமிழின்

பொருள் போல் இனிதாய்ப் புகழ்
மன்னன் மாறன் பொதியிலின் கோன்
அருள் போல் குளிர்ந்து அன்னமும்
துன்னும் நீர்த்து எங்கள் ஆடு இடமே
141

காவி அம் தண் துறை சூழ்ந்து கடையல்
கறுத்தவர் மேல்
தூவி அம்பு எய்தவன் தொண்டி
வண்டார் புன்னைத் தூமலர்கள்
தாவிய வெண் மணற்றாய் அறிந்தார்
கட்குத் தண் தமிழின்
ஆவியும் போல இனிதாய் உளது
எங்கள் ஆடு இடமே 142

அம் சிறை வண்டு அறை காந்தளம்
செம் போது சென்றி யான் தருவன்
பஞ்சு உறை தேர் அல்குலாய்
வரற்பாற்று அன்று பாழி ஒன்னார்
நெஞ்சு உறையாச் செற்ற வேல் மன்னன்

நேரி நெடு வரைவாய்
மஞ்சு உறை சோலை வளாய் தெய்வம்
மேவும் வரை அகமே 143

நீ விரி கோதை இங்கே நில் நின்னால்
வரற்பாலது அன்று
தீ விரி காந்தள் சென்றி யான் தருவன்
தெய்வம் அங்குடைத்தால்
பூ விரி வார் பொழில் பூலந்தை
வானவன் பூ அழித்த தானவன்
மாவிரி தானை எம் கோன் கொல்லி
சூழ்ந்த வரை அகமே 144

பொருமா மணிமுடி மன்னரைப்
பூலந்தை பூ அழித்த
குரு மா மணிவண்ணன் கோன்
நெடுமாறன் குமரி முந்நீர்
அருமா மணி திகழ் கானலின்வாய்
வந்து அகன்ற கொண்கன்
திருமா மணி தேரொடு சென்றது என்

சிந்தனையே 145

அன்னம் புரையும் நடையாள் புலம்
பெய்த அத்தம் என்னும்
பொன் அம் சிலம்பு கதிரோன்
மறைதலும் போயினவால்
தென்னன் திருமால் கழல் நெடுமாறன்
திருந்து செங்கோல்
மன்னன் குமரிக் கரும் கழி மேய்ந்த
வண்டானங்களே 146

பொருங் கழல் மாறன் புல்லா மன்னர்
பூலந்தைப் பூங்குருதி
மருங்கழி நீர் மூழ்கக் கண்ட எம் கோன்
கானல் வண்டு ஆர்
கரும் கழி மேய்ந்த செங்கால் வெள்ளை
அன்னம் கதிரொடும் தம்
பெரும் கழி காதன்மை நீங்கி இவனில்
பிரிந்தனவே 147

மேயின் தம் பெடையடும் எம்
மெல்லியலாளை வெம் தீப்
பாயின மாலைக்குக் காட்டிக் கொடுத்து
பரந்து மண் மேல்
ஆயின சீர் அரிகேசரிக்கு அன்று
அளநாட்டுடைந்து
போயின தெவ்வரின் போயின கானலில்
புள் இனமே 148

நீர் வண்ணன் வெண் திரை மேல் நின்ற
வேந்தன் நெல்வேலி ஒன்னார்
போர் வண்ணம் வாட்டிய பூழியன்
பூந்தண் குருந்து ஒசித்த
கார் வண்ணன் போல் வண்ணன் காவிரி
நாடு அன்ன காரிகையாள்
ஏர் வண்ணம் நோக்கி நின்று
என்னையும் நோக்கினள் எம் மனையே
149

உளம் மலையாமை திருத்தி

பொருவான் உடன்று எழுந்தார்
களம் மலையாமைக் கடையல்
வென்றான் கடல் தானை அன்ன
வள முலை வால் முறுவல் தையல்
ஆகத்து வந்து அரும்பும்
இள முலை நோக்கி நின்று என்னையும்
நோக்கினன் எம் மனையே 150

செயல் மன்னும் ஆவது சொல்லாய்
சிலம்ப தென் பாழி வென்ற
கயல் மன்னு வெல் கொடிக் காவலன்
மாறன் கடி முனை மேல்
அயல் மன்னர் போல் கொய்து
மாள்கின்றதால் அணி வான் உரிஞ்சும்
புயல் மன்னு கோட்ட மணி வரைச்
சாரல் எம் பூம் புனமே 151

என் ஏர் அழியா வகை என்னை வெற்ப
இருஞ்சிறை வாய்
மன் ஏர் அழிய வென்றான் முனை

போல் கொய்து மாள்கின்றதால்
மின் ஏர் திகழும் மழை கால் கழிய
வியல் அறை வாய்ப்
பொன் நேர் திகழும் அணி வரைச் சாரல்
புனத் தினையே 152

திரை ஆர் குருதிப் புனல் மூழ்கச்
செந்நிலத்து அன்று வென்ற
உரை ஆர் பெரும் புகழ் செங்கோல்
உசிதன் ஒள் பூம் பொதியில்
வரை ஆர் தினைப் புனம் கால் கொய்ய
நல் நாள் வரைந்து நின்ற
விரை ஆர் மலர் இயல் வேங்காய்
நினக்கு விடை இல்லையே 153

வான் உடையான் முடிமேல் வளை*
எற்றியும் வஞ்சியர் தம்
கோன் உடையாப் படை கோட்டாற்று
அழிவித்தும் கொண்ட வென்றி
தான் உடையான் சத்ரு துரந்தரன் பொன்

வரை மேல்
மீன் உடையான் கொல்லி வேங்காய்
நினக்கு விடை இல்லையே 154

* இந்திரன் முடி மேல் வளை எறிந்த
'திருவிளையாடல்'

நன்று செய்தாம் அல்லம் நல் நுதலாய்
நறையாற்று வெம் போர்
நின்று செய்தார் உந்தி வந்த நெடும்
கைக் களிற்று உடலால்
குன்று செய்தான் கொல்லி வேங்கையை
மெல் அரும்பாய்க் கொய்தல்
அன்று செய்தாம் எனில் நிற்பது
அன்றோ நம் அகல் புனமே 155

உலம் புனை தோள் மன்னர் கூட
வல்லத்து அட்டவர் உரிமை
கலம் புனை கோதையர் அல்லல்
கண்டான் கொல்லிச் சாரல் நண்ணி

வலம் புனை வில்லோடு அருவிப் புனம்
கண்டு வாடி நின்றால்
சிலம்பனை நையற்க என்னும்கொல்
வேங்கைச் செழும் பொழிலே 156

பொரும் கண்ணி சூடி வந்தார் படப்
பூலந்தைப் பொன் முடி மேல்
இரும் கண்ணி வாகை அணிந்த எம்
கோன் கொல்லி ஈர்ம் சிலம்பில்
கரும் கண்ணி காக்கின்ற பைம் புனம்
கால் தோய் நாள் வரைந்த
பெரும் கண்ணியரைப் பொன் வேங்கை
என்றோ இன்னும் பேசுவதே 157

பைந்நின்ற ஆடு அரவு ஏர் அல்குலாள்
செல்ல நாள் பணித்த
இந்நின்ற வேங்கை குறையாது இளம்
சந்தனம் குறைத்தார்
மெய்ந்நின்ற செங்கோல்
வினையசரத்தன் விண் தோய்

பொதியில்
மைந்நின்ற சாரல் வரை அக வாணர்
மடவியரே 158

நெய் ஒன்று வேல் நெடுமாறன் தென்
நாடு அன்ன நேரிழை இம்
மை ஒன்று வாள் கண் மடந்தை திறத்து
இட்ட அறம் திரிந்து
பொய் ஒன்று நின் கண் நிகழும்
என்றால் பின்னைப் பூம் சிலம்பா
மெய் ஒன்றும் இன்றி ஒழியும்
கொல்லோ இவ் இயல் இடமே 159

திரைப் பால் இரும் புனல் சேவூர் எதிர்
நின்ற சேரலன் கோன்
வரைப் பால் அடையச் செற்றான்
வையை அன்னாள் திறத்து வண்டு ஆர்
விரைப் பாய் நறுங் கண்ணியாய்
பொய்மை நீ சொல்லின் மெய்ம்மை
என்பது

உரைப்பார் பிறர் இனி யாவர்
கொல்லோ இவ் உலகின் உள்ளே 160

வந்து அணங்கா மன்னர் தேய
முன்னாள் மழையே அயர்த்த
கந்து அணங்கா மத யானைக் கழல்
மன்னன் கார் பொதியில்
சந்தனம் சாய்ந்து செங்காந்தளம் பூத்து
அழல் போல் விரியும்
கொந்து அணங்கு ஈர்ம் பிண்டி யாம்
விளையாடும் குளிர் பொழிலே 161

காந்தளம் போது எம் கரும் குழல் போல்
கடையல் ஒன்னார்
தாம் தளர்ந்து ஓட வை வேல் கொண்ட
வேந்தன் தண்ணம் பொதியில்
சார்ந்து எம் சாந்தம் விளையாடு
இடமும் தளை அவிழும்
பூந்தளம் பிண்டி எரி போல் விரியும்
பொழில் அகமே 162

அணி நிற மாப் பகடு உந்தி வந்தார்
வல்லத்து அன்று அவிய
துணி நிற வேல் கொண்ட கோன்
கொல்லிச் சாரலின் சூழ் பொழில்வாய்
மணி நிற மா மயில் என்னை கொல்
பொன் ஏர் மலர் துதைந்த
கணி நிற வேங்கையின் மேல் துயிலாது
கலங்கினவே 163

கயில் கொண்ட வார் கழல் போர்
மன்னர் ஓட கடையல் கண் வேந்து
அயில் கொண்ட கோன் அரிகேசரி
கொல்லி அரு வரைவாய்
பயில் வண்டும் தேனும் பண் போல்
முரலும் பூம் பொழில்வாய்
துயில் கொண்டில துணையோடும் என்
செய்தன தோகைகளே 164

ஆழிக் கடல் வையம் காக்கின்ற கோன்
அரிகேசரி தென்

பாழிப் பகை செற்ற பஞ்சவன் வஞ்சிப்
பைம் பூம் புறவில்
பூழிப் புற மஞ்ஞை அன்ன நல்லாய்
கொள் கம்போ துதியேல்
தாழிக் குவளை நின் கண் போல்
விரியும் தட மலரே 165

விளைக்கின்ற பல் புகழ் வேந்தன்
விசாரிதன் விண்டு எதிர்ந்து
திளைக்கின்ற மன்னரைச் சேவூர்
அழித்தவன் தீம் தமிழ் போல்
வளைக்கு ஒன்று கை மங்கையாய்
சென்று கோடும் நின் வாயுள் வந்து
முளைக்கின்ற முள் எயிற்று ஏர்
கொண்ட அரும்பின் முல்லைகளே 166

பலராய் எதிர் நின்று பாழிப் பட்டார்
தங்கள் பைம் நிணம் வாய்
புலரா அகம்புடை வேல் மன்னன்
வேம்பொடு போந்தணிந்த

மலர் ஆர் மணி முடி மான் தேர்
வரோதயன் வஞ்சி அன்னாட்கு
அலராய் விளைகின்றதால் அண்ணல் நீ
செய்த ஆர் அருளே 167

பொருள் தான் என நின்ற மானதன்
பூலந்தைத் தோற்றுப் புல்லார்
இருள் தான் அடை குன்றம் ஏற
என்றோன் கன்னி ஈர்ம் பொழில்வாய்
மருள் தான் என வண்டு பாடும் தண்
தார் அண்ணல் வந்து செய்த
அருள் தான் அலராய் விளைகின்றதால்
மற்று இவ் ஆயிழைக்கே 168

நீர் அணி வேலி நெடுங்களத்து ஒன்னார்
நிணம் அளைந்த
போர் அணி வேல் மன்னன் கன்னி
அன்னாள் பொன் அணிவான்
கார் அணி வார் முரசு ஆர்ப்பப் பிறரும்
கருதி வந்தார்

வார் அணி பூங்குழல் அண்ணல் என்
ஆகி வலிக்கின்றதே 169

வேலைத் துளைத்த கண் ஏழை
திறத்தின்று விண் உரிஞ்சும்
சோலைச் சிலம்ப துணி ஒன்று அறிந்து
சுடரும் முத்த
மாலைக் குடை மன்னன் வாள்
நெடுமாறன் வண் கூடலின் வாய்க்
காலைத் திருமனை முற்றத்து இயம்பும்
கடி முரசே 170

போர் மலி தெவ்வரைப் பூலந்தை
வென்றான் புகார் அனைய
வார் மலி கொங்கை மடந்தையை வேறு
ஓர் மணம் கருதித்
தார் மலி வார் முரசு ஆர்ப்ப பிறரும்
கருதி வந்தார்
ஏர் மலி தார் அண்ணல் என்னோ இதன்
திறத்துஎண்ணுவதே 171

வேயும் புரையும் மென் தோளி
திறத்தின்று எல்லையுள் விண்
தோயும் சிலம்ப துணி ஒன்று அறிந்து
தொல் நூல் புலவர்
ஆயும் தமிழ் அரிகேசரி கூடல் அகல்
நகர் வாய்
ஏயும் திரு மனை முற்றத்து இயம்பும்
எறி முரசே 172

குன்று ஒத்த யானை செங்கோல்
நெடுமாறன் தென் கூடல் அன்ன
மென் தொத்து அணி குழல் ஏழை
திறத்து விளைவு அறிந்தே
இன்று ஒத்தது ஒன்று துணி நீ சிலம்ப
அன்றாயின் எம் ஊர்
மன்றத்து நின்று முழங்கும் கொல்
நாளை மணமுரசே 173

நலம் புரி தெய்வம் அன்னாய் செய்வது
என் நறையாற்று வென்ற

உலம் புரி தோள் மன்னன் தென் புனல்
நாட்டு ஒருவற்கு இயைந்து
குலம் புரி கோதையைக் காப்பு
அணிந்தார் கொடி மாட முன்றில்
வலம்புரியோடு முழங்கும் கொல்
நாளை மணமுரசே 174

என்னால் இது செய்க என்று என்
சொல்லலாம் இகல் பாழி வென்ற
மின் ஆர் அயில் படைச் செங்கோல்
விசாரி தன் வீங்கு ஒலி நீர்த்
தென் நாடு எனினும் கொள்ளார்
விலையாய்த் தமர் சீர் செய் வண்டு
முன்நாள் மலர் ஒன்று அணையும் கண்
ஏழை முகிழ் முலைக்கே 175

மால் புரை யானை மணி முடி மாறன்
மாண்பாய் நிழற்றும்
பால் புரை வெண் குடைத் தென்னன்
பறந்தலைக்கோடி வென்ற

சேல் புரை வெம்மை அம் கானம்
எனினும் அவ் வேந்தன் செய்ய
கோல் புரைத் தன்மைய ஆம் நும்மொடு
ஏகின் இக் கொம்பினுக்கே 176

கழல் அணி போர் மன்னர் கான் நீர்க்
கடையல் படக் கடந்த
தழல் அணி வேல் மன்னன்
சத்ருதுரந்தரன் தன் முனை போன்று
அழல் அணி வெம்மைய ஆயினும்
கானம் அவன் குடையின்
நிழல் அணி தன்மைய ஆம் நும்மொடு
ஏகின் எம் நேரிழைக்கே 177

ஏனும் இகலும் அழிந்து தெவ் வேந்தர்
எல்லாம் இறைஞ்சிக்
காணும் கழல் நெடுமாறன் செங்கோல்
நின்று காக்கும் மண் மேல்
சேணும் அகலாது உடன் என்னோடு
ஓடித் திரிந்து வந்த

நாணும் அழியத்தகு கற்பு மேம்பட
நைகின்றதே 178

பாயப் புரவி கடாய் வந்து பாழிப் பகை
மலைந்தார்
தேயச் சிலை தொட்ட தென்னவன் தேம்
தண் பொதியிலின்வாய்
வேய் ஒத்த தோளி நும்மொடு வரவு
விரும்பவும் தன்
ஆயத்தவரை நினைந்து கண்ணீர்
கொண்டு அலமந்தவே 179

கொங்கை தளரினும் கூந்தல்
நரைப்பினும் ஏந்தல் மற்று இவ்
அங்கை அடைக்கலம் என்றே கருதி
அருள்க கண்டாய்
கங்கை மணாளன் கலிமதனன் கடிமா
மணற்றி
மங்கை அமர் அட்ட கோன் வையை
நாடு அன்ன மாதரையே 180

மென்முலை வீழினும் கூந்தல்
நரைப்பினும் விண் உரிஞ்சும்
நல் மலைநாட இகழல் கண்டாய்
நறையாற்றில் வென்ற
வில் மலி தானை நெடும் தேர்
விசாரிதன் வேந்தன் பெம்மான்
கொல் மலி வேல் நெடும் கண்ணிணைப்
பேதைக் கொடியினையே 181

பண் தான் அனைய சொல்லாய் பைய
ஏகு பறந்தலைவாய்
விண்டார் படச் செற்ற கோன் வையை
சூழ் வியல் நாட்டகம் போல்
வண்டு ஆர் பொழிலும் மணி அறல்
யாறும் மருங்கு அணைந்து
கண்டார் மகிழும் தகைமையது யாம்
செல்லும் கானகமே 182

சிறிய பைங் கண் களிறு ஊர்ந்து தென்
பாழியில் செற்று அதிர்ந்தார்

மறிய வை வேல் கொண்ட தென்னவன்
வையை நல் நாட்டகம் போல்
முறிய பைம் போதுகள் மேல் வண்டு
பாடி முருகு உயிர்க்கும்
நறிய பைங் கானம் நையாது நடக்க என்
நல் நுதலே 183

அலை மன்னு பைங் கழல் செங்கோல்
அரிகேசரி அளிஆர்
இலை மன்னு மாலை முத்தக்
குடையான் இகல் வேந்தரைப் போல்
மலை மன்னு வெய்யோன் மறைந்தனன்
மாது மெல்ல வாடி நைந்தாள்
சிலை மன்னு தோள் அண்ணல்
சேர்ந்தனை செல் எம் சிறுகுடிக்கே 184

நின்று ஆங்கு எதிர்ந்தார் குருதியுள் ஆழ
நெடுங்களத்து
வென்றான் விசாரிதன் கூடல்
அன்னாளும் மிக மெலிந்தாள்

குன்று ஆர் சுடரோன் மறைந்தனன் கூர்
வேல் விடலை தங்கிச்
சென்றால் அழிவது உண்டோ
அணித்தால் எம் சிறுகுடியே 185

நீயும் இவளும் இன்றே சென்று சேர்திர்
நெல்வேலி ஒன்னார்
தேயும்படி செற்றவன் தென்னன் தென்
புனல் நாட்டு இளையர்
வாயும் முகமும் மலர்ந்த கமல மணித்
தடத்துப்
பாயும் கயல் அவர் கண் போல் பிறழும்
பழனங்களே 186

ஒள் முத்த வார் கழல் கை தந்து என்
ஊறா வறு முலையின்
கண் முத்தம் கொண்டும் முயங்கிற்று
எல்லாம் கரு வெம் கழை போய்
விண் முத்த நீள் சுரம் செல்லியவோ
விழிஞத்து வென்ற

தண் முத்த வெண் குடையான் தமிழ்
நாடு அன்ன தாழ் குழலே 187

வேடகம் சேர்ந்த வெம் கானம்
விடலையின் பின் மெல் அடி மேல்
பாடகம் தாங்கி நடந்தது எவ்வாறு
கொல் பாழி வென்ற
கோடக நீள்குடிக் கோன் நெடுமாறன்
தென் கூடலின்வாய்
ஆடக மாடம் கடந்து அறியாத என்
ஆரணங்கே 188

நளி முத்த வெண் மணல் மேலும்
பனிப்பன நண்பன் பின் போய்
முளி உற்ற கானம் இறந்தன போலும்
நிறமும் திகழும்
ஒளி முத்த வெண் குடைச் செங்கோல்
உசிதன் உறந்தை அன்ன
தெளி முத்த வால் முறுவல் சிறியாள்
தன் சிலம்படியே 189

மழை கெழு கார் வண் கை வானவன்
மாறன் வண் கூடல் அன்ன
விழை கெழு கொங்கை என் பேதை ஓர்
ஏதிலனோடு இயைந்துக்
கழை கெழு குன்றம் கடப்பவும் நீ
கண்டு நின்றனையே
தழை கெழு பாவை பலவும் வளர்கின்ற
தண் குரவே 190

நினைப்ப அரும் புண்ணியம் செய்தாய்
குரவே நெடுங்களத்து
வினைப் பொலி மால் களிறு உந்தி
வென்றான் வியல் நாட்டகத்தார்
மனைப் பொலி பாவை பயந்தேன்
வருந்தவும் நீ கடத்துள்
எனைப் பல பாவை பயந்தும் எய்தாய்
ஓர் இரும் துயரே 191

வில்லவன் தானை நறையாற்று அழிந்து
விண் ஏற வென்ற

வல்லவன் மாறன் எம் கோன் முனை
போல் சுரம் வாள் நுதலாள்
செல்ல அவன் பின் சென்ற ஆறு
போழ்து என்குச் செல்லுமே
பல்லவம் ஆக்கித் தன் பாவை
வளர்க்கின்ற பைங் குரவே 192

வில்லான் விறல் அடி மேலன பொன்
கழல் வெண் முத்தன்ன
பல் ஆள் வினை அடி மேலன பாடகம்
பஞ்சவர்க்கு
நெல் ஆர் கழனி நெடுங்களத்து அன்று
நிகர் மலைந்த
புல்லாதவர் யார் கொல் அரும் சுரம்
போந்தவரே 193

நிழல் ஆர் குடையடு தண்ணீர் கரகம்
நெறிப்பட கொண்டு
அழல் ஆர் அரும் சுரத்து ஊடு
வருகின்ற அந்தணிர்காள்

கழலான் ஒருவன் பின் செங்கோல்
கலிமதனன் பகை போல்
குழலாள் ஒருத்தி சென்றனளோ
உரைமின் இக்குன்று இடத்தே 194

குடை ஆர் நிழல் சேர உறி சேர்
கரகத்தொடு குன்றிடத்து
நடையால் மெலிந்து வருகின்ற
அந்தணிர் ஞாலம் எல்லாம்
உடையான் ஒளி வேல் உசிதன் தென்
கூடல் ஒள் தீம் தமிழ் போல்
இடையாள் விடலை பின் சென்றனளோ
இவ் இரும் சுரத்தே 195

செறி கழல் வேந்தரைச் சேவூர் அமர்
வென்ற தென்னன் செய்ய
நெறி கெழு கோன் நெடுமாறன் முனை
போல் நெடும் சுரத்து
வெறி கமழ் கோதை இங்கே நின்றது
இ·தாம் விடலை தன்கைப்

பொறி கெழு திண் சிலை வாளியின்
எய்த பொருு களிறே 196

கொடு வில் படை மன்னர் கோட்டாற்று
அழியக் கணை உதைத்த
நெடு வில் தடக்கை எம் கோன்
நெடுமாறன் தன் நேரி முன்னால்
இடு வில் புருவத்தவள் நின்ற சூழல்
இது உதுவாம்
கடு வில் தொடு கணையால் அண்ணல்
எய்த கதக் களிறே 197

ஆளையும் சீறும் களிற்று அரிகேசரி
தெவ்வரைப் போல்
காளையும் காரிகையும் கடம் சென்று
இன்று காண்பர் வெம் கேழ்
வாளையும் செங்கண் வராலும் மடல்
இளம் தெங்கு உகுத்த
பாளை அம் தேறல் பருகிக் களிக்கும்
பழனங்களே 198

நகு வாயன பல பெய்துற்ற நட்டாற்று
அருவரை போன்று
உகு வாய் மதக் களிறு உந்தி வென்றான்
மனம் போன்று உயர்ந்த
தொகு வாயன சுனை சேர் குன்றம்
நீங்கலும் துன்னுவர் போய்ப்
பகு வாயன பல வாளைகள் பாயும்
பழனங்களே 199

கட வரை காதலனொடு கடந்த கயல்
நெடுங்கண்
பட அரவு அல்குல் அம் பாவைக்கு
இரங்கல்மின் பண்டு கெண்டை
வட வரை மேல் வைத்த வானவன்
மாறன் மலையம் என்னும்
தட வரை தானே அணிந்து அறியாது
தண் சந்தனமே 200

வெம் நீர் அரும் சுரம் காளையின் பின்
சென்றதும் மெல்லியல் மாட்டு

இந்நீர்மையீர் இரங்கல்மின் நறையாற்று இகல் அரசர்
தந்நீர் அழிவித்த சத்ருதுரந்தரன் தண் குமரி
முந்நீர் பயந்தார் அணிவார் பிறர் என்ப முத்தங்களே 201

நெடும் கடல் வேல் நெடுமாறன் நெடுங்களத்து அன்று வென்றான்
பெருங் கடல் ஞாலத்துள் பெண் பிறந்தார் தம் பெற்றார்க்கு உதவார்
இருங் கடல் போல் துயர் எய்தல்மின் ஈர்ந்தன என்று முந்நீர்க்
கரும் கடல் வெண் சங்கு அணிந்து அறியா தண் கதிர் முத்தமே 202

செம்மைத் தனிக் கோல் திறல் மன்னன் சேவூர் செரு மலைந்தார்
தம்மைப் புறம் கண்ட சத்ருதுரந்தரன் தம் முனை போல்

வெம்மைச் சுரம் வருகின்றனள் என்று
விரைந்து செல்வீர்
அம்மைத் தடம் கண் என்
ஆயத்தவருக்கு அறிமின்களே 203

கோடு அரில் நீள் மதில் கோட்டாற்று
அரண் விட்டுக் குன்று அகம் சேர்
காடு அரில் வேந்தர் செலச் செற்ற
மன்னன் கை வேலின் வெய்ய
வேடர் இல் வெம் சுரம் மீண்டனள்
என்று விரைந்து செல்வீர்
ஒடு அரி வாள் கண் என்
ஆயத்தவருக்கு உரைமின்களே 204

அங்கண் மலர்த் தார் அரிகேசரி
தென்னர் கோன் அயில் போல்
வெங்கண் நெடும் சுரம் மீண்ட விடலை
கெடல் அரும் சீர்
நங்கள் மனைக்கே வரல் நல்குமோ
செல்லு வேல அல்கி

தங்கள் மனைக்கே உய்க்குமோ
உரையாம் மற்று என் பேதையே 205

உருமினை நீள்கொடி மேல் கொண்ட
செங்கோல் உசிதன் எம் கோன்
செரு முனை போல் சுரம் நீண்ட
விடலை எம் தீதில் செல்வத்
திரு மனைக்கே நல்கும் கொல்லோ
வதுவை செயத் தன்
பெரு மனைக்கே உய்க்குமோ
உரையாம் மற்று என் பேதையே 206

தாளை வணங்காதவர் படச் சங்கமங்கை
தன்
வாளை வலம் கொண்ட மாறன் இவ்
வையத்தவர் மகிழ
நாளை நம் இல்லுள் வதுவை அயர்தர
நல்கும் கொல்லோ
காளையை ஈன்று கடன் அறி நல்
நெஞ்சின் காரிகையே 207

மை ஏறிய பொழில் மா நீர்க் கடையல்
மன் ஓட வென்றான்
மெய் ஏறிய சீர் மதுரை விழவினைப்
போல் நம் இல்லுள்
நெய் ஏர் குழலி வதுவை அயர்தர
நேரும் கொல்லோ
பொய்யே புரிந்த அக் காளையை ஈன்ற
பொலங் குழையே 208

மின் தான் அனைய விளங்கு ஒளி
வேலொடு வெண்டரை மேல்
நின்றான் நிலை மன்னன் நேரியன்
மாறன் இகல் முனை போல்
கொன்று ஆறலைக்கும் சுரம் என்பர்
நீங்கலும் கோல் வளைகள்
சென்றால் அது பிரிது ஆக இவ் ஊரவர்
சிந்திப்பரே 209

இகலே புரிந்து எதிர் நின்ற தெவ்
வேந்தர் இருஞ்சிறை வான்

புகலே புரிய என்றான் கன்னி அன்னாய்
புலம்பு உறு நோய்
மிகலே புரிகின்றது கண்டும் இன்று இவ்
வியன் கழி வாய்ப்
பகலே புரிந்து இரை தேர்கின்ற நாணாப்
பறவைகளே 210

அடு மலைபோல் களி யானை
அரிகேசரி உலகின்
வடு மலையாத செங்கோல் மன்னன்
வஞ்சி அன்னாய் மகிழ்ந்து
படு மலைபோல் வண்டு பாடிச்
செங்காந்தள் பைந் தேன் பருகும்
நெடு மலை நாடனை நீங்கும் என்றோ
நினைக்கின்றதே 211

சான்றோர் வரவும் விடுத்தவர் தம்
தகவும் நும்
வான் தோய் குடிமையும் நோக்கின்
அல்லால் வண் பொருள் கருதின்

தேன் தோய் கமழ் கண்ணிச் செம்பியன்
மாறன் செங்கோல் மணந்த
மீன் தோய் கடல் இடம் தானும் விலை
அன்று இம் மெல்லியற்கே 212

நடையால் இகல் வென்று நேரி நல்
வால் நறையாற்று வென்ற
படையான் பனி முத்த வெண் குடை
வேந்தன் பைங் கொன்றை தங்கும்
சடையான் முடி மிசைத் தண் கதிர்த்
திங்கள் தன் தொல் குலமாய்
உடையான் உசிதன் உலகும் விலை
அன்று எம் மெல்லியற்கே 213

தாது அலர் நீள் முடி தார் மன்னன்
மாறன் தண் அம் குமரி
போது அலர் கானல் புணர் குறி
வாய்த்தாள் புலம்பி நைய
ஏது இலர் நோய் செய்வதோ நின்
பெருமை என நெருங்கிக்

காதலர் தம்மைக் கழறின் என் ஊனம்
கரும் கடலே 214

மின் கண் படா அடி வேல் நெடுமாறன்
விண்டார் முனை மேல்
மன் கண் படாத மயங்கு இருள் நாள்
வந்த நீர் துறைவற்கு
என் கண் படாத நிலைமை சொல்லாது
இளம் சேவல் தழீஇ
தன் கண் படா நின்ற அன்னத்த தேயால்
தகவு இன்மையே 215

ஆயும் தமிழ் மன்னன் செங்கோல்
அரிகேசரி முனை போல்
தேயும் நினைவொடு துஞ்சாள் மடந்தை
இச் சேயிழையாள்
தாயும் துயில் மறந்தாள் இன்ன நாள்
தனித் தாள் நெடும் தேர்க்
காயும் கதிரோன் மலை போய் மறைந்த
கனை இருளே 216

வார் உந்து பைங் கழல் செங்கோல்
வரோதயன் வஞ்சி அன்னாள்
சேரும் திறம் என்னை தேன் தண்
சிலம்பனைத் திங்கள் கல் சேர்ந்து
ஊரும் துயின்றிடம் காவலோடு
அன்னை உள்ளுறுத்து எல்
லோரும் துயிலினும் துஞ்சா ஞமலி
அரை இருளே 217

மாவும் களிறும் மணி நெடும் தேரும்
வல்லத்துப் புல்லாக்
கோவும் துமிய வை வேல் கொண்ட
கோன் அம் தண் கூடல் அன்னாய்
பூவும் புகையும் கமழ்ந்து பொன்னாம்
உம்பர் பேர் உலகு
மேவும் விழவொடு துஞ்சாது இவ்
வியல் நகரே 218

அடிக்கண் அதிரும் கழல் அரிகேசரி

தெவ்வன் துங்கக்
கொடிக்கண் இடி உரும் ஏந்திய
தென்னன் கூடல் அன்னாய்
வடிக்கண் இரண்டும் வள நகர் காக்கும்
வை வேல் இளைஞர்
துடிக்கண் இரட்டும் கங்குல் தலை
ஒன்றும் துயின்றிலவே 219

சென்று செரு மலைந்தார்கள் செந்தீ
மூழ்கச் செந்நிலத்தை
வென்று களம் கொண்ட கோன் தமிழ்
நாடு அன்ன மெல்லியலாய்
இன்று இவ் இரவின் இருள் சென்று
இடம் கொண்டது எங்கு கொல்லோ
நின்று விசும்பில் பகல் போல் எரியும்
நிலா மதியே 220

உருள் தங்கு மா நெடும் திண் தேர்
உசிதன் உலகு அளிக்கும்
அருள் தங்கு செங்கோல் அடல்

மன்னன் கொல்லி அரு வரை வாய்
மருள் தங்கு வண்டு அறை சோலைப்
பொதும்பில் வழங்கற்கு இன்னா
இருள் தங்கு நீள் நெறி எம்
பொருட்டால் வந்து இயங்கன்மினே
221

பண் குழை சொல் இவள் காரணமாய்
பனி முத்து இலங்கும்
வெண் குடை வேந்தன் விசாரிதன்
மேற்கரை எற்று எதிர்ந்தார்
புண் குடை வேல் மன்னன் தென்னன்
பொதியில் புன வரைவாய்
எண்கு உடை நீள் வரை நீ அரை எல்லி
இயங்கன் மினே 222

அன்பு எதிர்ந்தாலும் வருதல்
பொல்லாதய ஆர் அமருள்
முன்பு எதிர்ந்தார் படச் சேவை*
வென்றான் முகில் தோய் பொதியில்

பொன் பிதிர்ந்தால் அன்ன மின்மினி
சூழ் புற்றின் முற்றிய சோற்று
இன் பிதிர் வாங்கி எண்கு ஏறு திளைத்து
உண்ணும் ஈண்டு இருளே 223

* சேவை=சேவூர்

கை அமை வேல் விளக்காக கனை
இருள் நள் இரவில்
ஐய மைதோய் வெற்ப வாரல்
நறையாற்று அமர் கடத்தில்
வையம் எல்லாம் கொண்ட மன்னவன்
மாறன் வண்டு ஆர் பொதியில்
தெய்வம் எல்லாம் மருவிப் பிரியாச் சிறு
நெறியே 224

தோள் வாய் மணி நிற மங்கைக்கு
வாட்டவும் துன்னுதற்கே
நாள் வாய் வருதி விண் தோய் சிலம்பா
நறையாற்று நண்ணார்

வாள் வாய் உகச் செற்ற வானவன்
மாறன் மை தோய் பொதியில்
கோள் வாய் இளம் சிங்கம் நீங்கா
திரிதரும் குன்றகமே 225

காந்தள் முகை அன்ன மெல் விரல்
ஏழை தன் காரணமாய்த்
பூந்தண் சிலம்ப இரவில் வருதல்
பொல்லாது கொலாம்
வேந்தன் விசாரிதன் விண் தோய்
குடுமிப் பொதியில் என்றும்
தேம் தண் சிலம்பின் அரிமா திரிதரும் தீ
நெறியே 226

அழுதும் புலம்பியும் நையும் இவள்
பொருட்டாக ஐய
தொழுதும் குறை உற்று வேண்டுவல்
வாரல் துன்னார் நிணமும்
இழுதும் மலிந்த செவ்வேல் நெடுமாறன்
எம் கோன் முனை போல்

கழுதும் துணிந்து வழங்கல் செல்லாக்
கனை இருளே 227

பொய் தலை வைத்த அருளடு
பூங்குழலாள் பொருட்டாய்
மைத்தலை வைத்த வண் பூங்குன்ற நாட
வர ஒழீஇத்
நெய் தலை வைத்த வே வேல்
நெடுமாறன் எம் கோன் முனை போல்
கை தலை வைத்துக் கழுது கண் சோரும்
கனை இருளே 228

பணி கொண்டு வாழாது எதிர்ந்து
பறந்தலைகோடி பட்டார்
துணி கொண்டு பேய் துள்ள வேல்
கொண்ட கோன் சுடர் தோய் பொதியின்
அணி கொண்ட தார் அண்ணல் வாரல்
விடர் நின்று அரவு உமிழ்ந்த
மணி கொண்டு கானவர் வேழம் கடியும்
மயங்கு இருளே 229

உரவும் கடல் சூழ் உலகு உடை
வேந்தன் உசிதன் ஒன்னார்
பரவும் கழல் மன்னன் கன்னியம் கானல்
பகலிடம் நீ
வரவு மகிழ்ந்திலள் தையல்
வெய்யோன் போய் மலை மறைந்த
இரவும் வரவு என்ன ஊனம் என்று
ஆயினது இன் அருளே 230

அடி மேல் அகல் இடம் எல்லாம்
வணக்கி அமரர் தம் கோன்
முடி மேல் வளை புடைத்தோன்*
நெடுமாறன் முன்னாள் உயர்த்த
கொடி மேல் உரும் அதர் கூர் இருள்
வாரல்மின் நீர் மகிழும்
படி மேல் பகல் வம்மின் வந்தால்
விரும்பும் என் பல் வளையே 231

*இந்திரன் முடிமேல் வளை எறிந்த
திருவிளையாடல்

அஞ்சாது எதிர் மலைந்தார் அமர்
நாட்டுடனே மடிய
நஞ்சு ஆர் இலங்கு இலை வேல்
கொண்ட தென்னன் நல் நாடு அனைய
பஞ்சு ஆர் அகல் அல்குல் பால் பகல்
வந்தால் பழி பெரிதாம்
மஞ்சு ஆர் சிலம்ப வரவு என்ன ஊனம்
மயங்கு இருளே 232

ஓதம் கடைந்து அமரர்க்கு அமுதாக்கி
உணக் கொடுத்துப்
பூதம் பணி கொண்ட* பூழியன் மாறன்
பொதியிலின் வாய்
ஏதம் பழியொடு எய்துதலால் இரவும்
பகலும்
மாதம் கடைந்த மெல் நோக்கி
திறத்தைய வாரல்மின்னே 233

* 64 இல் ஓர் திருவிளையாடல்

மின் போல் சினத்து உரும் ஏந்திய
கோன் கன்னித் தாழ்துறை வாய்
பொன் போல் மலர்ப் புன்னைக்
கானலும் நோக்கிப் புலம்பு கொண்ட
என் போல் இரவின் எல்லாம் துயிலாது
நின்று ஏங்குதியால்
அன்போடு ஒருவற்கு அறிவு
இழந்தாயோ அலை கடலே 234

பொன்தான் பயப்பித்து கல் நிறம்
கொண்டு புணர்ந்து அகன்று
சென்றார் உளரோ நினக்குச் சொல்லாய்
செந்நிலத்து வெம் போர்
வென்றான் வியனில வேந்தன்
விசாரிதன் ரவல் கழல் சேர்ந்து
ஒன்றார் முனை போல் கலங்கித்
துஞ்சாயால் ஒலி கடலே 235

நெய்ந் நின்ற வேல் நெடுமாறன் எம்
கோன்அம் தண் நேரி என்னும்

மைந் நின்ற குன்றச் சிறுகுடி நீரைய
வந்து நின்றால்
கைந் நின்று கூப்பி வரை உறை
தெய்வம் என்னாது கண்டார்
மெய்ந் நின்று உணர்ப எனின்
உய்யுமோ மற்று இம் மெல்லியலே 236

அன்னாய் நெருநல் நிகழ்ந்தது கேள்
அகல் வேந்து இறைஞ்சும்
பொன் ஆர் கழல் நெடுமாறன் குமரி
அம் பூம் பொழில்வாய்
மின் ஆர் மணி நெடும் தேர் கங்குல்
ஒன்று வந்து மீண்டது உண்டால்
என்னா முகம் சிவந்து எம்மையும்
நோக்கினாள் எம்மனையே 237

பண் இவர் சொல்லி கண்டாள் தென்னன்
பாழிப் பகை தணித்த
மண் இவர் சீர் மன்னன் வாள்
நெடுமாறன் மலையம் என்னும்

விண் இவர் குன்றத்து அருவி சென்று
ஆடி ஓர் வேங்கையின் கீழ்
கண் இவர் காதல் பிடியடு நின்ற கரும்
களிறே 238

தொடுத்தாள் மலரும் பைங்கோதை நம்
தூதாய் துறைவனுக்கு
வடுத்தான் படா வண்ணம்
சொல்லும்கொல் வானோர்க்கு அமிழ்து
இயற்றிக்
கொடுத்தான் குல மன்னன் கோட்டாற்று
அழித்துத் தென் நாடு தன் கைப்
படுத்தான் பராங்குசன் கன்னி அம்
கானல் பறவைகளே 239

## 2 கற்பு

மைதான் இலாத தம் கல்வி மிகுத்து
வருவது எண்ணிப்
பொய்தான் இலாத சொல்லார் செல்வர்

போலும் புல்லாது அமரே
செய்தார் படச் செந்நிலத்தைக் கணை
மழை திண் சிலையால்
பெய்தான் விசாரிதன் தென்னன்
நாட்டுறை பெண் அணங்கே 240

தேக்கிய தெள் திரை முந்நீர் இரு நிலம்
தீது அகலக்
காக்கிய செல்வது காதலித்தார் அன்பர்
காய்ந்து எதிரே
ஆக்கிய வேந்தர் அமர் நாடு அடைய
தன் அஞ்சுடர் வாள்
நோக்கிய கோன் அம் தண் கூடல்
அனைய நுடங்கிடையே 241

தாக்கிய போர் வய வேந்தர்
இருவர்க்கும் சந்திடைநின்று
ஆக்கிய செல்வது காதலித்தார் நமர் ஆர்
அமருள்
வீக்கிய வார் கழல் வேந்தர் தம் மானம்

வெண்மாத்துடனே
நீக்கிய கோன் நெடு நீர் வையை நாடு
அன்ன நேரிழையே 242

வார் ஆர் முரசின் விரை சேர் மலர் முடி
மன்னவர்க்காய்ச்
சேரார் முனை மிசைச் சேறல் உற்றார்
தம் செந்நிலத்தை
ஓராது எதிர்ந்தார் உடலல் துலாவி
உருள் சிவந்த
தேரான் திருவளர் தென் புனல் நாடு
அன்ன சேயிழையே 243

கல் நவில் தோள் மன்னன் தெம்முனை
மேல் கலவாரை வெல்வான்
வில் நவில் தோள் அன்பர் செல்வர்
விசாரிதன் என்னும்
தென்னவன் சேரர் பட நறையாற்றுச்
செரு அடர்த்த
மன்னவன் கூடல் வண் தீம் தமிழ்

அன்ன மட மொழியே 244

படலைப் பனி மலர்த் தார் அவர்
வைகிய பாசறை மேல்
தொடலை கமழ் நறும் கண்ணியினாய்
சென்று தோன்றும் கொல்லோ
அடலைப் புரிந்த செவ்வேல் அரிகேசரி
தென் குமரி
கடலைப் பருகி இரும் விசும்பு ஏறிய
கார் முகிலே 245

வாமான் நெடும் தேர் வய மன்னர் வாள்
முனை ஆர்க்கும் வண்டார்
தேமா நறும் கண்ணியாய் சென்று
தோன்றும்கொல் சேரலர் தம்
கோமான் கடல் படை கோட்டாற்று
அழியக் கணை உதைத்த
ஏ மாண் சிலையவன் கன்னி நல் நீர்
கொண்ட ஈர் முகிலே 246

இன் பார்ப்பு ஒடுங்க வலம் சிறை
கோலி இடஞ்சிறையால்
அன்பால் பெடை புல்லி அன்னம்
நடுங்கும் அரும் பனி நாள்
என் பால் படரொடு என்னாம்கொல்
இருஞ்சிறை ஏற்ற மன்னர்
தென் பால் படச் சென்ற கோன் வையை
நாடு அன்ன சேயிழையே 247

அன்பு உடை மாதர் ஆற்றும்கொல்
ஆற்றுக்குடி அடங்கா
மன் படை வாட வென்றான் தமிழ்
நாட்டு வலம் சிறைக்கீழ்
இன்புடை ஏர் இளம் பார்ப்புத் துயிற்ற
டஞ்சிறைக் கீழ்
மென் பெடை புல்லிக் குருகு நரல்கின்ற
வீழ் பனியே 248

கடி ஆர் இரும் பொழில்கண் அன்று
வாட்டி இன்று கலவாப்

படியார் படை மதில் மேல் பனி வந்து பாரித்ததால்
வடி ஆர் அயில் நெடுமாறன் எம் கோன் கொல்லி வண்டு இமிர் பூங்
கொடி ஆர் இடை மட மான் பிணை நோக்கி குழை முகமே 249

கயவாய் மலர் போல் கரும் கண் பிறழ வெண் தோடு இலங்க
நயவார் முனை மிசைத் தோன்றி இன்று நட்டாற்று எதிர்ந்த மன்னை
வியவார் படை இட்டு எண் காதம் செலச் சென்று மீன் திளைக்கும்
வயவால் செறித்த எம் கோன் வஞ்சி அன்னாள் தன் மதி முகமே 250

தண் கயல் வெள் ஒளி ஓலையதாய் தட மா மதிள் மேல்
பொங்கு அயல் வேந்தர் எரி மூழ்கத் தோன்றி இன்று போதுகள் மேல்

பைங் கயல் பாய் புனல் பாழிப்
பற்றாரைப் பணித்த தென்னன்
செங் கயலோடு சிலையும் கிடந்த மதி
முகமே 251

வென்றே களித்த செவ்வேல்
நெடுமாறன் விண்டார் முனை மேல்
சென்றே வினை முற்றி மீண்டனம்
காரும் சிறிது இருண்டது
இன்றே புகும் வண்ணம் ஊர்க திண்
தேர் இள வஞ்சி என்ன
நின்றே வணங்கும் நுண் இடை ஏழை
நெடு நகர்க்கே 252

பட்டு ஆர் அகல் அல்குல் பாவையும்
காணும்கொல் பாழி வெம் போர்
அட்டாள் அரிகேசரி ஐயம் ஆயிரம்
யானை முன்நாள்
இட்டான் மருகன் தென்னாட்டு இருள்
மேகங்கள் கண்டீர்

கட்டார் கமழ் கண்ணி போல்
மலர்கின்றன கார்ப் பிடவே 253

புரிந்த மெல் ஓதியை வாட்டும்கொல்
வல்லத்துப் போர் எதிர்ந்தார்
இரிந்த வகை கண்ட வாள் மன்னன்
தென்நாட்டு இரும் சுருள் போய்
விரிந்த புதவங்கள் மேய்ந்து தம்
மென்பிணை கை அகலாது
திரிந்த திண் கோட்ட கலை மா உலளும்
செழும் புறவே 254

செறி கழல் வானவன் செம்பியன்
தென்நாடு அனைய வென்றி
வெறி கமழ் கோதைகண் வேட்கை
மிகுத்து அன்று வெள்ளம் சென்ற
நெறி கெழு வெண் மணல் மேல்
நெய்யில் பால் விதிர்ந்து அன்ன
அந்துண்
பொறி கெழு வாரணம் பேடையை

மேய்விக்கும் பும் புறவே 255

ஆழித் திருமால் அதிசயற்கு ஆற்றுக்குடி
உடைந்தார்
சூழிக் களிற்றின் துணை திண் தேர் துயர்
தோன்றின்று காண்
கோழிக் குடுமியம் சேவல் தன்
பேடையைக் கால் குடையாப்
பூழித்தலை இரை ஆர்வித்துத் தான்
நிற்கும் பூம் புறவே 256

கைம் மாவின் புறவின் கவடு தொடர்ந்து
கனல் விழிக்கும்
மெய்ம் மா மத களி வேழங்கள் பின் வர
முன்னுக தேர்
நெய்ம் மான் அயில் நெடுமாறன் நிறை
புனல் கூடல் அன்ன
மைம் மாண் குழலாள் பரமன்று வான்
இடை வார் புயலே 257

முன்தான் உறத் தா அடி முள் உறீஇ
முடுகாது திண் தேர்
என்றால் இழைத்து அவற்றோடி இற்றை
நாளும் இழைக்கும்கொல்லாம்
ஒன்றா வயவர் தென் பாழிப் பட ஒளி
வேல் வலத்தால்
வென்றான் விசாரிதன் தென் புனல் நாடு
அன்ன மெல்லியலே 258

கடிக் கண்ணி வேந்தரை ஆற்றுக்குடி
கன்னி வாகை கொண்டே
முடிக் கண்ணியாய் வைத்த மும்மதில்
வேந்தன் முசிறி அன்ன
வடிக் கண்ணி வாட வள மணி
மாளிகைச் சூளிகை மேல்
கொடிக் கண்ணி தாம் அண்ண நண்ணி
வந்து ஆர்த்தன கொண்டல்களே 259

பண் தேர் சிறை வண்டு அறை பொழில்
பற்றாத மன்னர்

புண் தேர் குருதிப் படியச் செற்றான்
புனல் நாடு அனையாள்
கண்டு ஏர் அழிந்து கலங்கும் அவள் தன்
கடி நகர்க்கு என்
திண் தேர் செலவு அன்றி முன் செல்லல்
வாழி செழு முகிலே 260

கொற்றாம் கயில் மன்னன் கோன்
நெடுமாறன் தென் கூடல் அன்ன
மற்றா இள முலை மாதே பொலிக நம்
முன்கடைவாய்ச்
செற்றார் பணி திறை கொண்ட நம்
அன்பர் செழுமணித் தேர்ப்
பொன் தார்ப் புரவிகள் ஆலித்து வந்து
புகுந்தனவே 261

ஆரும் அணி இளம் போந்தையும்
வேம்பும் அலர்ந்த தண் தேன்
வாரும் கமழ் கண்ணி வானவன் மாறன்
தன் மாந்தை அன்னாய்

காரும் கலந்து முழங்கி வீசின்று
காதலர்தம்
தேரும் சிலம்பிப் புகந்தது நங்கள் செழு
நகர்க்கே 262

முன்தான் முகிழ் முலை ஆர முயங்கி
முறவல் உண்டு
சென்றார் வரவிற்குத் தூது ஆகி வந்தது
தென் புலிப்பை
வென்றான் விசாரிதன் வேல்
நெடுமாறன் வியன் முடி மேல்
நின்றான் மணி கண்டம் போல் இருள்
கூர்கின்ற நீள் முகிலே 263

மடை ஆர் குவளை நெடும் கண் பனி
மல்க வந்து வஞ்சி
இடையாள் உடனாய் இனிது கழிந்தன்று
இலங்கும் முத்தக்
குடையான் குலமன்னன் கோன்
நெடுமாறன் குளந்தை வென்ற

படையான் பகை முனை போல் சென்று
நீடிய பாசறையே 264

இல்லார் இருமையும் நன்மை எய்தார்
என்று இருநிதிக்குக்
கல்லால் சுரம் செல்வதே நினைந்தார்
நமர் காய்ந்து எதிர்ந்த
புல்லால் அவிய நெல்வேலி
பொருகணை மாரி பெய்த
வில்லான் விசாரிதன் தென் புனல் நாடு
அன்ன மெல்லியலே 265

ஊனம் கடைந்த உயர் குடை வேந்தன்
உசிதன் ஒன்னார்
மானம் கடந்து வல்லத்து அமர் ஓட்டிய
கோன் இம் மண்மேல்
ஈனம் கடந்த செங்கோல் மன்னன் தெம்
முனை போல் எரி வேய்
கானம் கடந்து சென்றோ பொருள்
செய்வது காதலரே 266

விரை தங்கும் நீள் முடி வேந்தன்
விசாரிதன் வெம் முனை போல்
வரை தங்கு கால் நமர் செல்லுப
என்றாலும் வாள் நுதலாள்
நிரை தங்கு கழலக்கண் நித்திலம் சிந்த
நில்லா
அரை தங்கு மேகலை மெல் அடி மேல்
வீழ்ந்து அரற்றினவே 267

மன் ஏந்திய வாள் புகழ் நெடுமாறன்
தன் மாந்தை அன்ன
மின் ஏந்திய இடையாய் நமர் செல்வர்
வெம் கானம் என்னப்
பொன் ஏந்து இள முலை பூந்தடம் கண்
முத்தம் தந்தன போய்
என் ஏந்திய புகழீர் இனிச் செய்யும்
இரும் பொருளே 268

வரு நெடும் கங்குல் எவ்வாறு இனி
நீந்தும் வல்லத்து வென்ற

செரு நெடும் தானையான் எம் கோன்
தெவ்வர் போலச் சென்று அத்தம்
என்னும்
ஒரு நெடும் குன்றம் மறைந்து உலகு
எலாம் வளாய்க்கும் குணபால்
திரு நெடும்குன்றம் கடந்தால் வருவது
செழும் சுடரே 269

படம் தாழ் பணை முக யானைப்
பராங்குசன் பாழி வென்ற
இடம் தாழ் சிலை மன்னன் வெல் களம்
போல் விரிந்த அந்தி
நடந்தால் இடை இருள் போய்க் கடை
யாம நல் ஊழி மெல்லக்
கடந்தால் அதன் பின்னை அன்றே
வருவது காய் கதிரே 270

தேனக்க தாரவர் காண்பர் செல்லார்
அவர் செல்ல ஒட்டி
நானக் குழல் மங்கை நன்று செய்தாய்

என்று வாய் கனிந்த
மானக் கதிர் வேல் வரோதயன் கொல்லி
வரை அணிந்த
கானத்து இடைப் பிடி கை அகலாத
கரும் களிறே 271

இருள் மன்னு மேகமும் கார் செய்து
எழுந்தன வெள் வளையாய்
மருள் மன்னு வண்டு அறை தார் அவர்
தாமும் இம் மாநிலத்தார்க்கு
அருள் மன்னு செங்கோல் அரிகேசரி
அம் தண் கூடல் அன்ன
பொருள் மன்னும் எய்திப் புகுந்தனர்
வந்து நம் பொன் நகர்க்கே 272

தகரக் குழலாய் தகவிலலேள சங்கமங்கை
வென்ற
சிகரக் களிறு செங்கோல் நெடுமாறன்
தென் கூடலின்வாய்
மகரக் கொடியவன் தன் நெடுவேல் நின்

மலர் விலைக்குப்
பகரக் கொணர்ந்து இல்லம் தொறும்
திரியும் இப் பல் வளையே 273

மைவார் இரும் பொழில் வல்லத்துத்
தெவ்வர்க்கு வான் கொடுத்த
நெய் வாய் அயில் நெடு மாறன்
தென்நாடு அன்ன நேரிழையாய்
இவ்வாய் வருவர் நம் காதலர் என்ன
உற்றேற்கு எதிரே
செவ்வாய் துடிப்பக் கரும் கண்
சிவந்தன சேயிழைக்கே 274

சென்றே ஒழிக வயல் அணி ஊரனும்
தின்னத் தந்த
கன்றே அமையும்கொல் வேண்டா பல்
யாண்டு கறுத்தவரை
வென்றே விழிஞம் கொண்டான் கடல்
ஞாலம் மிக வலிது
அன்றே அடியென் அடி வலம் கொள்ள

அருளாகவே 275

இழுது நிணம் தின்று இருஞ்சிறைத்
தெம்மன்னர் இன்குருதி
கழுது படியக் கண்டான் கன்னி அன்ன
மின் நேரிடையாய்
அழுது சுவல் சென்ற அக்
கரையானொடும் வந்தமையால்
தொழுது வழிபடல் பாலை பிழைப்பு
எண்ணல் தோன்றலையே 276

வாரார் சிறு பறை பூண்டு மணிக் காசு
உடுத்துத் தந்தை
பேரான் சுவலின் இருப்ப வந்தான்
பிழைப்பு எண்ணப் பெறாய்
நேரார் வயவர் நெடுங்களத்து ஓட நெய்
வேல் நினைந்த
பாரார் புகழ் மன்னன் தென் புனல் நாடு
அன்ன பல் வளையே 277

மிடை மணிப் பூண் மன்னர் ஓட
விழிஞத்து வென்றவன் தாள்
புடை மணி யானையினான் கன்னி
அன்னாள் பொரு கயல் கண்
உடை மணியானொடு நீ வர ஊடல்
சிவப்பு ஒழிந்தும்
அடை மணி நீலத்து அணி நிறம்
கொண்டும் அலர்ந்தனவே 278

பங்கயப் பூம் புனல் நாடன் பராங்குசன்
பாழி ஒன்னார்
மங்கையர்க்கு அல்லல் கண்டான் மணி
நீர் வையை வார் துறைவாய்
எம் கையைத் தீம் புனல் ஆட்டிய ஈரம்
புலர்த்தி வந்தும்
அங்கையின் சீறடி தீண்டிச் செய்யீர்
செய்யும் ஆர் அருளே 279

கேளே பெருக்கும் அரும் பொருள்
செய்தற்கு கேடில் திங்கள்

நாளே குறித்துப் பிரியல் உற்றார் நமர் தீ விழியால்
ஆளே கனலும் கொல் யானைச்
செங்கொல் அரிகேசரி தன்
வாளே புரையும் தடம் கண்ணி என்னோ
வலிக்கின்றதே 280

வந்தார் கரு மெல் குழல் மங்கை
மாநிதிக்கு என்று அகன்ற
ஈர்ந்தார் அவர் இன்று
காண்பர்கொல்லோ இகலே கருதி
சேர்ந்தார் புறம் கண்டு செந்நிலத்து
அன்று திண் தேர் மறித்து
தேர்ந்தான் தன் குலமுதலாய பிறைக்
கொழுந்தே 281

தொழித் தார் சிறை வண்டு அறை
குழலாய் கங்கை சூழ் சடை மேல்
இழித்தான் மணிகண்டம் போல்
இருண்டன காரிகையே

விழித்தார் விழிஞுக்கடல் கோடி தன்
வெண் சுடர் வாள்
சுழித்தான் குமரி நல் நீர் கொண்டு
எழுந்த கண முகிலே 282

உளம் கொண்டு வாடி இன்று நட்டாற்று
எதிர்ந்தார் உதிர வெள்ளம்
குளம் கொண்டு தோற்பித்த கோன்
நெடுமாறன் கை போலும் கொள்
களம் கொண்டு கார் செய்த காலைக்
களவின் கவை முகத்த
இளம் கண்டகம் விட நாகத்தின் நா
ஒக்கும் ஈர்ம் புறவே 283

சுழலும் வரி வண்டு அலம்ப சொரி மதம்
வாய்ப் புக நின்று
அழலும் களிற்று அரிகேசரி தென் புனல்
நாடு அனையாய்
கழலும் வரி வளை காக்க வந்து இன்று
கனலும் செந்தீ

தழலும் குளிர்ந்து பொடிப்படப்
போர்க்கின்ற தாழ் பனியே 284

தனியார் தகைநலம் வாட்டும்கொல்
ஆற்றுக்குடி தன்
குனியார் சிலை ஒன்றினால் வென்ற
கோன் கொங்க நாட்டகொல்
கனி ஆர் களவின் அகமுள் கதிர் முத்தம்
கோப்பன போல்
பனி ஆர் சிதர் துளி மேல் கொண்டு
நிற்கும் பருவங்களே 285

வான் நலம் கொண்ட கையான் மன்னன்
மாறன் தன் மாந்தை அன்னாள்
தான் நலம் தேயப் பனியோ கழிந்தது
தண் குவளைத்
தேன் நலம் போதுவளாய் வந்து தண்
தென்றல் தீ விரியும்
வேல் நலம் காலம் எவ்வாறு
கழியும்கொல் மெல்லியற்கே 286

மெல்லியலாய் தங்கள் மேல்
வெய்யவாய் விழிருத்து வென்ற
மல் இயல் தோள் மன்னன் சென்னி
நிலாவினன் வார் சடையோன்
வில் இயல் காமனைச் சுட்ட வெம் தீச்
சுடர் விண்டவன் மேல்
சொல்லிய பாரித்த போன்றன
பிண்டியின் தே மலரே 287

மஞ்சார் இரும் பொழில் வல்லத்து வாள்
மன்னர் போர் அழித்த
அஞ்சா அடுகளி யானைத்
தானையினான் அகல் ஞாலம் அன்ன
பஞ்சார் அகல் அல்குலாள் தன்மைச்
சொல்லும் பணை முலை மேல்
செஞ்சாந்து அணிந்து வந்தாள் செய்த
கோலத்தின் சேயிழையே 288

பொன் ஆர் புனல் அணி ஊரன் வந்து
உன்னில் புறங்கடையான்

என்னா அளவில் சிவந்தான் சிவந்தும்
இயல்வது அன்றால்
அன்னாய் எனச் சிவப்பு ஆற்றினள்
வல்லத்து அரசு அவித்த
மின் ஆர் அயில் மன்னன் தென் புனல்
நாடு அன்ன மெல்லியலே 289

கோடிய நீள் பருவத்து மடந்தை
கொழும் பணைத் தோள்
வாடிய வாட்டம் உணர்ந்து மனை
இடை வந்தமையால்
ஆடு இயல் யானை அரிகேசரி தெவ்வர்
போல் அகன்று
நீடிய காதலர் தாமே பெரியர் இந்நீள்
நிலத்தே 290

விண்டுறை தெவ்வர் விழிஞத்து அவிய
வெல் வேல் வலம் கைக்
கொண்டு உறை நீக்கிய கோன் வையை
நாடு அன்ன கோல் வளை இவ்

வண்டு உறை கோதை வருந்த நல்லார்
இல்லில் வைகுதலால்
தண் துறை சூழ் வயல் ஊரன் பெரிதும்
தகவு இலனே 291

நிரந்து ஆங்கு எதிர்ந்தார் அவிய
நெல்வேலித் தன் நீள் சிலைவாய்ச்
சரந்தான் துரந்து வென்றான் தமிழ் நாடு
அன்ன தாழ் குழலாள்
பரந்தார் வரு புனல் ஊரன் தன்
பண்பின்மை எங்களையும்
கரந்தாள் கடலிடம் எல்லாம் புகழ் தரும்
கற்பினளே //292

வெம் சுடர் நோக்கும் நெருஞ்சியில்
ஊரனை வெண் முறுவல்
செஞ்சுடர் வாள் முகத்தாள் முன்னை
என்பால் திரியலனேல்
அம் சுடர் வேல் அரிகேசரி கோளம
நாட்டு உடைந்தார்

தம் சுடர் வாள் படை போல உடைக
என் சங்கங்களே 293

வெறி தரு பூந்தார் விசாரிதன் வேலை
முந்நீர் வரைப்பின்
எறிதரு கோல் செல்லும்
எல்லையுள்ளேம் அல்லம் நீர்மை
இல்லாச்
சிறியர் வாழ் பதியே எம் இல்லம்
சிறிதே எமக்கே
எறி புனல்ஊர் எவ்வாறு அமையும் நின்
இன் அருளே 294

வரிய வண்டு ஆர் தொங்கல் மான் தேர்
வரோதயன் வல்லத்து ஒன்னார்
கரிய வை வேல் கொண்ட காவலன்
காக்கும் கடல் இடம் போல்
பெரிய நல் நாட்டு பெரிய நல் ஊரில்
பெரிய இல்லிற்கு
உரிய மிக்கீர்க்கு இயல்பு அன்று கொல்

இவ்வாறு ஒழுகுவதே 295

இல்லென்று இரவலர்க்கு ஈதல்
செய்யாதான் இல்லம் எனப்
புல் என்று வாடிப் புலம்பல் நெஞ்சே
நமக்கு யார் பொருந்தார்
வில் ஒன்று சேர் பொறி வானவன் வாட
விழிஞம் கொண்ட
கொல் ஒன்று வாள் படையான் தமிழ்
நாடு அன்ன கோல் வளையே 296

அரை அணங்கும் துகிலாள் அல்லள்
ஆற்றுக்குடியில் வென்ற
உரை அணங்கும் தமிழ் வேந்தன்
உசிதன் ஒள் பூம் பொதியில்
வரை அணங்கோ அல்லையோ
என்னை யாம் மம்மர் எய்த உண்கண்
நிரை அணங்கும் பனி நீர் கொள்ள
நின்ற இந் நேரிழையே 297

துளியும் துறந்த வெம் கானம்
செலவின்றி செல்லுதுமேல்
ஒளியும் திரு நுதல் வாடி
உய்யாள்கொல் உசிதன் என்ற
தெளியும் சுடர் ஒளி வாள் மன்னன்
செங்கோல் எனச் சிறந்த
அளியும் பெறாது நெஞ்சே நைய நின்ற
இவ் ஆயிழையே 298

மை ஆர் தடம் கண் வரும் பனி சோர
வருந்தி நின்று இந்
நெய் ஆர் குழலாள் இனைய
நறையாற்று நின்று வென்ற
கை ஆர் கொடும் சிலைச் செங்கோல்
கலிமதன் காய் கலிக்கு
வெய்யான் பகை என நீங்குதுமோ
நெஞ்சம் வெஞ்சுரமே 299

செரு மால் கடற்படை சேரலர் கோன்
நறையாற்று அழிய

பொரு மா சிலை தொட்ட பூழியன்
மாறன் பொரு முனை போல்
அருமா நெறி பொருட்கோ செல்வது
அன்று நெஞ்சே அவள் தன்
பெரு மா மழைக் கண்ணும் நித்திலம்
சிந்தின போது உறவே 300

செல்லார் அவர் என்று யான்
இகழ்ந்தேன் சுரம் செல்லத் தன் கண்
ஒல்லாள் அவள் என்று அவர்
இகழ்ந்தார் மற்று இவை இரண்டும்
கொல்லார் அயில் படைக் கோன்
நெடுமாறன் குளந்தை வென்ற
வில்லான் பகை போல் என்னுள்ளம்
தனை மெய்விக்குமே 301

காடவும் நெடும் தேர்க் கலிமதனன் கலி
தேயச் செங்கோல்
நடாவும் நகை முத்த வெண்குடை
வேந்தன் நண்ணார் மதில் பாய்ந்து

இடாவும் மத மா மழை பெய்யும் ஓதை
என முழங்கப்
பிடாவும் மலர்வன கண்டே மெலிவது
என் பெண் அணங்கே 302

விடக்கு ஒன்று வை வேல் விசாரிதன்
மற்று இவ் வியலிடம் போய்
நடக்கின்ற செங்கோல் ஒரு குடை
வேந்தன் நண்ணார் முனைபோல்
கடக் குன்றம் சென்ற நம் காதலர்
பொய்யலர் நையல் பொன்னே
மடக் கொன்றை அம்பினை கார் என்று
மலர்ந்தனவே 303

பூரித்த மென் முலையாய் அன்று
பூலந்தைப் போர் மலைந்த
வேரித் தொடையன் விசாரிதன் விண்
தோய் கொல்லி மேல்
மூரிக் களிறு முனிந்து கை ஏற்ற முழங்கு
கொண்டல்

மாரிக்கு முல்லையின் வாய் நகவே நீ
வருந்துவதே 304

மை ஆர் தடம் கண் மடந்தை வருந்தற்க
வாள் முனை மேல்
நெய் ஆர் அயிலவர் காணப் பொழிந்த
நெடுங்களத்து
வெய்யார் அமர் இடை வீழச் செந்தூவி
வெள்ளம் புதைத்த
கை ஆர் சிலை மன்னன் கன்னி நல் நீர்
கொடை கார் முகிலே 305

கொடி ஆர் மதில் கோட்டாற்று அரசர்
குழாம் சி¨த்த
வடி ஆர் அயில் படை வானவன்
மாறன் வள மதுரைத்
துடி ஆர் இடையாய் வருந்தல்
பிரிந்துளங்கு ஒளி சேர்
அடி ஆர் கழலார் அணுக வந்து ஆர்த்த
அகல் விசும்பே 306

ஆ மான் அனைய மென் நோக்கி
அழுங்கல் அகன்று சென்ற
தேமா நறுங் கண்ணியாரையும் வாட்டும்
தென் பாழி வென்ற
வாமா நெடும் தேர் மழை வண்ணன்
மாறன் வண் தீம் தமிழ்நர்
கோமான் கொடி மேல் இடி உரும்
ஆர்க்கின்ற கூர்ம் புயலே 307

கரும் தண் புயல் வண் கைத்
தென்னவன் கை முத்து அணிந்து
இலங்கும்
இரும் தண் குடை நெடுமாறன் இகல்
முனை போல் நினைந்து
வருந்தல் மடந்தை வருவர் நம் காதலர்
வான் அதிரக்
குருந்தம் பொருந்தி வெண் முல்லைகள்
ஈன்றன கூர் எயிரே 308

புலம் முற்றும் தண் புயல் நோக்கிப்

பொன் போல் பசந்ததன் பால்
நலம் முற்றும் வந்த நலமும் கண்டாய்
நறையாற்று எதிர்ந்தார்
குலம் முற்றும் வாட வை வேல்
கொண்ட மாறன் குரை கடல் சூழ்
நிலம் முற்றும் செங்கோலவன் தமிழ்
நாடு அன்ன நேரிழையே 309

அறை ஆர் கழல் மன்னன் ஆற்றுக்குடி
அழல் ஏற என்று
கறை ஆர் அடர் வேல் வலம் கொண்ட
கோன் கூடல் ஞாலம் அன்னாய்
நிறையாம் வகை வைத்து நீத்தவர்
தேரொடு நீ பிணித்த
இறை ஆர் வரி வளை சோர வந்து
ஆர்த்தன ஏர் முகிலே 310

திரு நெடும் கோதையும் தெய்வம்
தொழாள் தெவ்வர் மேல் செலினும்
பெரு நெடும் தோள் அண்ணல் போர்ந்து

அன்றுத் தங்கான் பிறழ்வு இல்
செங்கோல்
அருநெடும் தானை அரிகேசரி அம் தண்
கூடல் அன்ன
கரு நெடும் கண் மடவாய் அன்ன தால்
அவர் காதன்மையே 311

பார் மன்னன் செங்கோல் பாராங்குசன்
கொல்லிப் பனி வரை வாய்க்
கார் மன்னு கோதை அன்னாளும்
அருந்ததிக் கற்புடையாள்
தேர் மன்னன் ஏவச் சென்றாலும்
முனைமிசைச் சேர்ந்து அறியா
போர் மன்னு வேல் அண்ணல் பொன்
நெடும் தேர் பூண் புரவிகளே 312

கூர் ஆர் அயில் கொண்டு நேரார் வளம்
பல கொண்ட வென்றித்
தேரான் வரோதயன் வஞ்சி அன்னாள்
தெய்வம் சேர்ந்து அறியாள்

வார் ஆர் கழல் மன்னன் தானே
பணிப்பினும் வல்லத்துத் தன்
நேரார் முனை என்றும் தங்கி அறியான்
நெடும் தகையே 313

உலத்தின் பொலிந்த திண் தோள்
மன்னன் ஒள் தேர் உசிதன்
நிலத்தில் பொலிந்த செங்கோலவன் நீள்
புனல் கூடல் அன்ன
நலத்திற்கும் நாணிற்கும் கற்பிற்கும்
ஞாலத்தின் நல்ல நங்கள்
குலத்திற்கும் தக்கது அன்றால் இன்னை
ஆகுதல் கோல் வளையே 314

தேன் நறவு ஆர் கண்ணிச் செம்பியன்
மாறன் செழும் குமரி
மால் நிற வெண் திரை மாக்கடல்
தோன்றினை மண் அளந்த
நீல் நிற வண்ணனும் ஏந்தினன் தம் முன்
நிறம் புரை தீம்

பால் நிற வெண் சங்கம் யார் நின்னின்
படிமையரே 315

வருவர் வயங்கிழாய் வாட்டாற்று எதிர்
நின்று வாள் மலைந்த
உருவ மணி நெடும் தேர் மன்னர் வீய
ஒளி தரு மேல்
புருவம் முரிவித்த தென்னவன் பொன்
அம் கழல் இறைஞ்சாச்
செரு வெம் படை மன்னர் போல் வெம்
கானகம் சென்றவரே 316

பண்டான் அனைய சொல்லாய் பரி
விட்டுப் பறந்தலைவாய்
விண்டார் படச் செற்ற கோன் கொல்லிப்
பாங்கர் விரை மணந்த
வண்டு ஆர் கொடி நின் நுடங்கு இடை
போல் வணங்குவன
கண்டால் கடக்கிற்பரோ கடப்பர் அன்பர்
கானகமே 317

சென்றார் வருதல் நன்கு அறிந்தேன்
செருச் செந்நிலத்தை
வென்றான் பகை போல் மெல்லியல்
மடந்தை முன் வெற்பு எடுத்து
நின்றான் அளந்த நிலமும் குளிர்ந்தது
நீள் புயலால்
பொன்தான் மலர்ந்து பொலங்
கொன்றை தாமும் மலர்ந்தனவே 318

கோவைக் குளிர் முத்த வெண் குடைக்
கோன் நெடுமாறன் முந்நீர்
தூ வைச் சுடர் வேலவர் சென்ற
நாட்டினும் துன்னும் கொலாம்
பூவைப் புதுமலர் வண்ணன் திரை பெரு
நீர்க் குமரி
பாவைக்கு இணை அணையாய்
கொண்டு பண்டித்த பல் முகிலே 319

கோடல் மலர்ந்து குருகு இலை
தோன்றின கொன்றைச் செம் பொன்

பாடல் மணி வண்டு பாண் செயப்
பாரித்த பாழி வென்ற
ஆடல் நெடும் கொடி அரிகேசரி அம்
தண் பொன்னி
நாடன் பகை போல் மெலி கின்றது என்
செய்ய நல் நுதலே 320

முளி தரு வேல் நல் கண் கானவர்
ஆர்ப்ப முகில் கணங்கள்
தளி தரு தண் சிலம்பா தக்கது அன்று
தாரணி தன்மேல்
அளி தரு செங்கோல் அரிகேசரி அம்
தண் கூடல் அன்ன
ஒளி தரு வாள் நுதலாள் நைய இவ்வாறு
ஒழுகுவதே 321

மானக் கடும் சிலை மான் தேர்
வரோதயன் வாள் முனை போன்று
ஊனப்பட நினைந்து வாடல் பொன்னே
உறு வெம் சுரம்

நானக் குழல் மிசை நாள் கொய்து
கொண்டே நயந்து அணிந்த
கானக் குரவின் அம் போதே கமழும்
என் கைத்தலமே 322

வாடும் நிலை தனையே நீக்கி மண்
காத்து வல்லத்து எதிர்ந்தார்
ஓடும் நிலை கண்டான் வையை ஒள்
நுதல் மங்கையரோடு
ஆடும் நிலையும் அல்லை அவரோடு
அம் பூம் பொழில் வாய்
நீடம் நிலைமையும் அல்லை சொல்லாய்
என் நெடும் தகையே 323

பள்ளத்து நீலம் பறந்தலைக்கோடிப்
பட்டார் குருதி
வெள்ளத்துச் செங்கழுநீர் வைத்த கோன்
தொண்டி வண்டு மென் பூ
வள்ளத்துத் தேம் மகிழ் கானல் வந்தார்
சென்ற தேர் வழி எம்

உள்ளத்தி னோடு சிதைய வந்து ஊரும்
ஒலி கடலே 324

இடி ஆர் முகில் உரும் ஏந்திய கோன்
இருணோதயன் தன்
வடி ஆர் அயில் அன்ன கண்ணி தன்
வாட்டம் உணர்ந்து வண் பூங்
கடி ஆர் கரும் கழி மேய்கின்ற கானல்
கலந்து அகன்ற
கொடியாரினும்மிகத் தாமே கொடிய
குருகினமே 325

---

பிற்சேர்க்கை

குருகைப் பெருமாள் கவிராயர்
இயற்றிய 'மாறன் அகப்பொருள்'
எனும் அகப்பொருள் இயல் நூல் உரை
மூலமாக பல பாடல்கள்
கிடைத்தன. அவற்றில்

மேல்கண்டவற்றிற்கு வேறானதான சில
பாண்டிக் கோவை பாடல்கள் இவை

1

யாழ் இயல் மெல் மொழியார் தம்முள்
வைத்தெனக்கு எவ்விடத்தும்
தோழி என்ஆருயிர் என்பது காட்டும்
செறி பொழில் சூழ்
கோழியும் வானவன் வஞ்சியும்
கொண்டவன் வண்டு அறை தார்ப்
பூழியன் மாறன் புகார் அனையாள்
படைப் போர் விழியே

2

கயில் அணி ஆர் கழல் காவலர் ஓடக்
கடையல் வென்ற
அயில் அணிவேல் அரிகேசரி ஒன்னார்
என்பது உன்
உயிர் அனையான் தனைக் கண்டு உரை
செய்தால் ஒழிதல் உண்டே
குயில் மொழியாள் தனைச் சென்று
யான் இன்னமும் கூடுதலே

3

பொன்னம் கனைகழல் பூழியன்
பூலந்தைப் போர் மலைந்த
தென்னன் பொதியில் செழும் புனம்
காக்கும் சிலைநுதல்பூண்
அன்னம் தனை ஆரணங்கினை
ஆடமைத் தோளியை ஏழ்
மன்னும் கடல் அமிழ்து தந்தனைக்
கண்டு வருகுவனே

4

கொடியார் நுணுகிடைத் தான் புனைக்
கோலம் எனக் குலவும்
படி நான் புனைந்தனன் பாவாய்
வருந்தல் பறந்தலைவாய்
வடிவார் இலங்கு அயில் மன்னரை
வென்ற வழுதிச் செம்பொன்
அடி நாள் மலர் இணை சூடா
மடந்தையர் போல் அயர்ந்தே

---

## அடிக்குறிப்புரை

பாடல் சொற்கள் சந்தி பிரித்து படைக்கப் பட்டுள்ளமையால் எழுத்து அசை சீர் தளை வேறுபட்டு படிக்க சில இடங்களில் இசை குன்றி காணப்படும்.

உரையினுள் பாடல்களுக்கான துறை விளக்கங்கள் நீண்ட சொற்றொடர்களாக உள்ளமையாலும் சூத்திரங்களுக்கு இடையே காட்டப்பட்டவை மட்டும் இடை விட்டு
கிடைப்பதாலும் ஓர் பாடலுக்கும் அடுத்தற்கும் நூல் ஒழுக்கு மற்றும் பொருள் தொடர்பு
காணப்படாமையாலும், ஒரே துறைக்குப் பற்பல பாடல்கள் உள்ளமையாலும், தனித்தனி தலைப்புகள் தவிர்க்கப்பட்டன.

இந்நூல் பழமையான கோவைகளில்
ஒன்றாகக் போற்றப்படும் 8-9 ஆம்
நூற்றாண்
டினரான மாணிகவாசகரின்
சிற்றம்பலக்கோவையாரினுக்கு
மூத்ததெனலாம். அவர்தம்
திருவாசகத்தில் அரிகேசரி எனும்
இடப்பெயர் குறிக்கப்படுகின்றது.

இந்நூல் அரிகேசரி பாண்டியனின்
சீர்த்தியை பெரிதியம்பவே
இயற்றப்பட்டாலும்
இறையனார் அகப்பொருள் இயல்
நூலின் உரைக்கு விரியாக துறைகளை
விளக்கவும்
பிறந்தது இ·து எனக் கருத இடமுள்ளது.
அல்லது அவ் உரைகாரரோ அவர்
முன்னோரோ
இந்நூலின் ஆசிரியரும் ஆகலாம்.
எவ்வாறு எனின் உரையில் துறை ஒவ்

ஒன்றுக்கும் ஓரே
வகைத்ததான மேற்கோள் பாடல்கள் பல
வலிந்து வைக்கப்பட்டுள்ளன.
இவ்வகையில்
நமக்கோர் நூல் கிடைத்தமை சிறப்பே.

அதான்று வரலாற்று ஆய்வுநர்கட்கு
பெரிதும் பயன்படும் சேர சோழ
பாண்டிய நாட்டு
ஊர்கள், மன்னர், தலைநகர்,
போர்க்களங்கள், வரலாற்று நிகழ்ச்சிகள்
பல இதனில் காணக்
கிடைக்கின்றன. இவற்றின் குறு
தொகுப்புதனைக் கீழே காண்க. இவை
பாடல்களில் குறிக்
கப்படும் நிலை மற்றும் பொருள்களைப்
பற்றி கூர்ந்து ஆய்வு செய்யின் தமிழக
வரலாற்று
மேம்பாட்டிற்கு உதவலாம்.

பாண்டியன் நெடுமாறனைக் குறிக்கும் பெயர்கள் = அரிகேசரி,
அதிசயன், இரணாந்தகன்,
இரணோதயன், உசிதன், சத்ருதுரந்தரன்,
சிலம்பன், செம்பியன்-மாறன்,
செழியன், துறைவன், தென்னவன்,
நேரியன்,
பஞ்சவன், பராங்குசன், பூழியன்,
பூழியன்-மாறன், மாறன், மீனவன்,
வரோதயன், வழுதி, வானவன்,
வானவன்-மாறன், விசயசரிதன்,
விசாரிதன்

பற்சொல் பண்புப் பெயர்கள் =
உரும்ஏந்தியகோன், கங்கைமணாளன்,
கலிமதனன், கன்னிப்பெருமான்,
சந்திரகுலத்தோன், தமிழ்நர் பெருமான்,
தீம்தமிழ்வேந்தன்,முத்தக்குடைமன்னன்,
வெண்குடைவேந்தன்,

அவன் வென்ற போர்க்களங்கள் =
அளநாடு, ஆற்றுக்குடி, இருஞ்சிறை, கடையல், களத்தூர், குளந்தை, கோட்டாறு, கோளமநாடு, சங்கமங்கை, செந்நிலம், சேவூர், தொண்டி, நட்டாறு, நறையாறு, நெடுங்களம், நெல்வேலி, பறந்தலை, பாழி, புலிப்பை, பூலந்தை, மணற்றிமங்கை, மேற்கரை, வல்லத்து, வாட்டாறு, விழிஞம், வெண்டரை, வெண்மாத்து, வேணாடு

குறிக்கப்படும் ஏனைய இடப்பெயர்கள்
அத்தமலை, உறந்தை, காவிரிநாடு, கூடல், கொங்கநாடு, கொல்லி, தொண்டி,
நேரிமலை, பறந்தலைக்கோடி, புகார், புனல்நாடு, பொதியில், மந்தாரம், மலயம்,
மாந்தை, முசிறி, வஞ்சி,
விழிஞத்துக்கடல்கோடி (தனுஷ்கோடி

போன்று கடல் முனை)

இதர நிகழ்ச்சிகள்
பாண்டியர் கெண்டை பனிவரைமீது
பொறித்தமை, மதுரை விழா,
வேம்பொடு
போந்து(பனை)அணிதல், புலியும்
கயலும் செம்பொன் மலைமிசை
இருத்தல்

நூ த லோகசுந்தரமுதலி - மயிலை

This page was first put up on June, 2008
Please send your comments and corrections to the WebMasters of this site